மலர்-1 இதழ்-3 அக்டோபர் 1-15 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக வெளிவரும் இமெயில் புத்தகம்



## வேப்பமரம் கசக்க காரணம்

மூதேவியா?
ஸ்ரீதேவியா?
குளியல் ரகசியம்

# மகிமைகள் நிறைந்த நவராத்திரி

# எளிமையான பரிகாரங்கள்!!

❍ மிகக்கொடிய கடன் தொல்லைகளுக்கு ஸ்ரீ யோக நரசிம்மரை வழிபடுவதும் மற்ற கடன் தொல்லைகளுக்கு ஸ்ரீ லட்சுமி நரசிம்மரை வழிபடுவதும் மிக சிறந்த பரிகாரமாகும்!!!

❍ ஹோமங்களில் சிறப்பு வாய்ந்தது மிருத் யுஞ்ஜய ஹோமம். சிவாலயங்களில் ஈசான்ய பகுதியில் வீற்றிருக்கும் காலபைரவரை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 முதல் 6.00. மணி ராகு காலத்தில் வழிப்பட்டு மிருத்யுஞ்ஜ ஹோமம் நடத்துவதால் பெறும் பயனைப் பெற்று நோய்,மரண பயம் நீங்கி நீண்ட ஆயுள் பெறலாம்!!



❍ குடும்பத்தில் தாங்க முடியாத கஷ்டங்கள் ஏற்படும் போதும் உடனடியாக அருகிலுள்ள ஆலயங்களில் தீபம் ஏற்றி வைப்பது அந்த விநாடியே கஷ்டங்கள் குறைவதற்கு மகரி ஷிகள் கூறிய ரகசிய பரிகாரமாகும்!!!

❍ வியாழக்கிழமை தட்சிணா மூர்த்திக்கு மாப்பொடியால் அபிசேகம் செய்தால் செல்வ வளம் பெருகும்.கடன் தொல்லைகள் அகலும்!!

❍ வெள்ளெருக்கு விநாயகரை விட்டு அறைகளில் உயரத்தில் வைக்க வீட்டில் ஏதும் பூத கண சேஷ்டைகள் இருந்தால் விலகி விடும்!!

❍ சக்கரத்தாழ்வார் சன்னதியில் நெய் தீபம் ஏற்றி தினமும் 12 முறை சுற்றி 48 நாட்கள் வழிபட தொழில்,வழக்கு சாதகமாகும்.21 செவ்வாய்க்கிழமை நெய்தீபம் ஏற்றிவர பில்லி சூன்யம் விலகும்!!

❍ இரண்டு சர்ப்பங்கள் இணைந்தது போல உள்ள நாகராஜ சிலைக்கு வெள்ளிக்கிழமை காலை 10.30 மணி முதல் 12.00 மணிக்கு ராகு காலத்தில் அபிசேகம் செய்து மஞ்சள் குங்குமம் வைத்து செவ்வரளி பூக்கள் சாற்றி நெய்தீபம் ஏற்றி தம்பதியினர் பெயருக்கு அர்ச்சனை செய்தால் தம்பதியினர் ஒற்றுமையுடன் அன்னியோன்யமாக வாழ்வார்கள்!!

❍ பித்ரு தோசம் உள்ளவர்கள் தொடர்ந்து அமாவாசைக்காலங்களில் நெய்தீபம் ஏற்றி பெருமாளை சேவிக்க பித்ரு தோசம் விலகும்!!

❍ வெள்ளிக்கிழமை நவக்கிரக சுக்கிரனுக்கு அகல் விளக்கில் கற்கண்டு போட்டு நெய் தீபம் எற்றி வழிபட கணவன் மனைவி கருத்து வேறுபாடு நீங்கும்!!

❍ திங்கள் கிழமை காலை 6.00 மணிக்குமேல் 7.00 மணிக்குள் நந்திக்கு ஜோடி அகல் விளக்கில் நெய் தீபம் ஏற்றி வர. குடும்பத்தில் அமைதி பிறக்கும்!!

www.aanmeegamalar.com



ஆன்மிகமலர் மெயில் புக்





# ஈரேழு, பதினான்கு தலைமுறை எவ்வாறு கணக்கிடுவது?

தற்போதைய கால கட்டத்தில் நமது தாய் தந்தையர், பாட்டன் பாட்டி போன்ற உறவு முறையை மட்டுமே நாம் அறிந்து வைத்துள்ளோம். கால சூழ்நிலையால், கூட்டுக் குடும்பம் என்ற நிலை தற்போது மெல்ல மெல்ல மறையத் துவங்கியுள்ளது. நகர்மயமாதல் என்ற நாகரீக வளர்ச்சியில் நாம் பலவற்றை இழந்து கொண்டிருக்கிறோம். அதில் மிக முக்கியமானது, சொந்த பந்தம் என்ற உறவுமுறை.

காசு, பணம், பொன், பொருள், மண் போன்ற பல காரணங்களுக்காக தற்போது குடும்ப அமைப்பின் கட்டமைப்பு இந்தியாவில் மாறிக் கொண்டு வருவதை கண்கூடாக காண்கிறோம். ஒரு காலத்தில் உலக நாடுகள் வியக்கும் வகையில் நமது நாகரீக வாழ்க்கை மேம்பட்டதாக இருந்தது, நமது நாகரீகத்தை பல்வேறு மேலை நாடுகள் தற்சமயம் பின்பற்றத் துவங்கியுள்ள நிலையில், நமது நாகரீகத்தை நாம் மறந்து வருவதும் வேதனைதான்.

நாம் ஏதாவது ஒரு விஷயத்தை பற்றி பேசும் பொழுது, “பரம்பரை பரம்பரையாய் இருக்கிறது” என்று சொல்வதுண்டு... அந்தப் பரம்பரை முறை தற்போதைய தலைமுறையினருக்கு தெரியாமலேயே உள்ளது.

பரம்பரை என்றால் என்ன? வழி வழியாக என்று சொல்லலாம் என்றாலும், “தலைமுறை தலைமுறையாக” என்பதே உண்மை பொருள் ஆகும்.

அப்படியென்றால், பரம்பரை என்பது முந்தைய தலைமுறையை குறிக்கும் சொல் என்றே கூறலாம்.

பரன் + பரை = பரம்பரை என்று கூறலாம்.

நாம் ................................ முதல் தலைமுறை
நமது தந்தை + தாய்....... இரண்டாம் தலைமுறை
பாட்டன் + பாட்டி............. மூன்றாம் தலைமுறை
பூட்டன் + பூட்டி .............. நான்காம் தலைமுறை
ஓட்டன் + ஓட்டி .............. ஐந்தாம் தலைமுறை
சேயோன் + சேயோள் ..... ஆறாம் தலைமுறை
பரன் + பரை.................... ஏழாம் தலைமுறை

ஒரு தலைமுறை சராசரியாக 60 வருடங்கள் என்று கொண்டால், ஏழு தலைமுறை 480 வருடங்கள்.. ஈரேழு தலைமுறை 960 வருடங்கள்.. (கிட்டத்தட்ட ஆயிரம் வருடங்கள்) ஆக, பரம்பரை பரம்பரையாக என்று சொல்வதன் பொருள் ஈரேழு, பதினான்கு தலைமுறையாக என்று பொருள் வரும்.

இந்து மதத்தில் மட்டுமே மனித இனத்தின் பரம்பரையை மிக நேர்த்தியாக கையாண்டிருக்கின்றனர்.

ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com

ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும்

# பிரச்சனை தீர்க்கும் தெய்வங்கள்

நமது பிரச்சனை என்ன என்பதை தெரிந்து கொண்டு அதற்குரிய தெய்வத்தை வணங்கினால் நமது பிரச்சனைகளுக்கு உடனடி பலன் கிடைக்கும் என்று பல்வேறு ஆன்மிக பெரியவர்கள் கூறியுள்ளனர்.

ஒருசில மகான்களிடம் நாம் நமது பிரச்சனையை கூறும் போது, அதற்கு சில தீர்வாக சில தெய்வ வழிபாட்டு முறையை கூறுவார்கள். அதன்படி நாம் வழிபடும் போது நமது பிரச்சனை எளிதாக தீர்வதை கண்கூடாக கண்டிருக்கிறோம். அந்த வகையில் பொதுவாக சில தெய்வங்களை வணங்கினால் ஒரு சில பொதுவான பிரச்சனைகள் தீரும் என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது.

ஆகையால் எந்த தெய்வத்தை வணங்கினால் என்ன குறை தீரும் என்பதை பற்றிப் பார்ப்போம்.



விக்னங்கள், இடையூறுகள் நீங்க **விநாயகர்**

செல்வம் சேர **ஸ்ரீமகாலட்சுமி, ஸ்ரீநாராயணர்**

அழியாச் செல்வம், ஞானம், சக்தி பெற **சிவஸ்துதி**

கல்வியில் சிறந்து விளங்க **சரஸ்வதி**

திருமணம் நடைபெற **ஸ்ரீகாமாட்சி அம்மன், துர்க்கை**

மாங்கல்யம் நிலைக்க **மங்கள கௌரி**

புத்திர பாக்கியம் பெற **சந்தான கிருஷ்ணன், சந்தான லட்சுமி**

தொழில் சிறந்து லாபம் பெற **திருப்பதி வெங்கடாசலபதி**

வீடும், நிலமும் பெற **ஸ்ரீசுப்ரமண்யர், செவ்வாய் பகவான்**

பில்லி, சூன்யம், செய்வினை அகல **ஸ்ரீவீரமாகாளி, ஸ்ரீநரசிம்மர்**

நோய் தீர **ஸ்ரீதன்வந்தரி, தட்சிணாமூர்த்தி**

ஆயுள், ஆரோக்கியம் பெற **ருத்திரன்**

மனவலிமை, உடல் வலிமை பெற **ராஜராஜேஸ்வரி, ஸ்ரீஆஞ்சநேயர்**

விவசாயம் தழைக்க **ஸ்ரீதான்யலட்சுமி**

உணவுக் கஷ்டம் நீங்க **ஸ்ரீஅன்னபூரணி**

பகைவர் தொல்லை நீங்க **திருச்செந்தூர் முருகன்**

உங்களுக்கான பிரச்சனைகளுக்கு அதற்கென்று கூறப்பட்டுள்ள தெய்வத்தை வணங்குங்கள்.





# பார்வையை கூர்மைப்படுத்தும் ருத்ர முத்திரை!

ஆன்மிக விஷயங்கள் ஒவ்வொன்றும் மனித மனதிற்கு மட்டுமின்றி மனித உடலுக்கும் மிகுந்த பயனுள்ளதாகவே இருக்கும். அந்த வகையில் யோக முத்திரைகளில் பல்வேறு முத்திரைகள் இருந்தாலும் அவற்றில் மிகுந்த சக்தி வாய்ந்தது ருத்ர முத்திரையாகும்.

கட்டை விரல், ஆள்காட்டி விரல், மோதிர விரல்களின் நுனியைச் சேர்த்துவைக்க வேண்டும். நடுவிரலும் சுண்டுவிரலும் நீட்டி இருக்க வேண்டும்.

நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து, கால்களைத் தரையில் பதித்தோ, விரிப்பின் மீது சப்பளங்கால் போட்டு நிமிர்ந்த நிலையில் அமர்ந்தோ, 10 முதல் 40 நிமிடங்கள் வரை செய்யலாம்.

இந்த முத்திரையால் ஏற்படும் பலன்கள்:

சோர்வு, களைப்பு, தலைசுற்றல் உணர்வு, வயோதிகத்தில் ஏற்படும் கிறக்கம் ஆகியவற்றைச் சரிசெய்யும். உடலுக்கு ஆற்றலைத் தரும்.

தலைக்கு ரத்த ஓட்டத்தை அதிகப்படுத்தும். நினைவாற்றல், கவனம் அதிகரிக்கும்.

பார்வைத்திறனைக் கூர்மைப்படுத்தும். ரத்த அழுத்தப் பிரச்சனை, சுவாசப் பிரச்சனைகளைச் சீர்செய்யும். மன அழுத்தத்தால் ஏற்படும் இறுக்கம், கழுத்து, முதுகு, இடுப்பு மற்றும் மார்பக வலி ஆகியவற்றை இந்த முத்திரை குறைக்கும்.

ரத்த நாளங்களில் உள்ள அடைப்புகள், கட்டிகள் ஆகியவற்றைச் சரிசெய்யும்.

வயோதிகத்தில் ஏற்படும் நினைவாற்றல் பாதிப்பு நோய்களான நடுக்குவாதம் பாதிப்பு உள்ளவர்கள் மூன்று மாதங்கள் தொடர்ந்து செய்துவர முன்னேற்றம் காணலாம்..



# கடுமையான மரபு

வரலட்சுமி நோன்பு கடைபிடிக்க கடுமையான மரபை கடைபிடித்தனர் நமது முன்னோர்கள்.

அந்தக் காலத்தில் வெற்றிலை, பாக்கு போடும் பழக்கம் ஆண், பெண் எல்லோரிடமும் இருந்தது. இதை சுண்ணாம்பு சேர்த்து சாப்பிட்டால் தான் வாய் நன்றாக சிவக்கும்.

ஆனால் சுண்ணாம்பு சேர்க்காமலேயே சாப்பிட்டு யாருடைய வாய் சிவக்கிறதோ, அவர் தான் வரலக்ஷ்மி விரதம் இருக்கத் தகுதியுடையவர் என்ற மரபு அக்காலத்தில் இருந்தது.



# 12 ராசியும் ஒவ்வொன்றும் பெற்றுள்ள நற்பண்புகளும்

ஒவ்வொரு ராசியும் 9 விதமான நற்பண்புகளைக் கொண்டுள்ளது. இந்த நற்பண்புகளை அந்த அந்த ராசிக்குரியவரிடமும் இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

1. மேஷம், 2. ரிஷபம், 3. மிதுனம், 4.கடகம், 5. சிம்மம், 6. கன்னி, 7. துலாம், 8.விருச்சிகம், 9. தனுசு, 10. மகரம், 11. கும்பம், 12.மீனம் ஆகிய ஒவ்வொரு இராசி மண்டலமும் தனித்துவம் வாய்ந்தவை. அதன் படி ஒவ்வொரு ராசியும் பெற்றுள்ள சிறப்பம்சங்களின் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது.

**மேஷம்** 1. வைராக்கியம் (Assertiveness) 2. தேசநலன் (Citizenship) 3. நிறைவேற்றுதல் (Chivalry) 4. துணிச்சல் (Courage) 5. கீழ்படிதல் (Obedience) 6. வெளிப்படையாக (Openness) 7. ஒழுங்குமுறை (Order) 8. ஏற்றுக்கொள்ளுதல் (Acceptance) 9. ஆன்மிகம் (Spirituality)

மேஷராசி ஜீரண மண்டலத்தின் ஆதாரமாகும்

**ரிஷபம்** : 1. கருணை (Mercy) 2. இரக்கம் (Compassion) 3. காரணம் அறிதல் (Consideration) 4. அக்கறையுடன் (Mindfulness) 5. பெருந்தன்மை (Endurance) 6. பண்புடைமை (Piety) 7. அஹிம்சை (Non violence) 8. துணையாக (Subsidiarity) 9. சகிப்புத்தன்மை (Tolerance)

ரிஷபராசி மண்டலமானது சிறுநீரக மண்டலத்தின் ஆதாரமாகும்

**மிதுனம்** : 1. ஆர்வம் (Curiosity) 2. வளைந்து கொடுத்தல் (Flexibility) 3. நகைச்சுவை (Humor) 4. படைப்பிக்கும் கலை (Inventiveness) 5. வழிமுறை (Logic) 6. எழுத்து கற்க பிரியம் (Philomathy) 7. è£óí‹ (Reason) 8. î‰Fóñ£è (Tactful-ness) 9. ¹Kந்து கொள்ளுதல் (Understanding)

மிதுனராசி மண்டலமானது நரம்பு மண்டலத்தின் ஆதாரமாகும்.

**கடகம்** : 1. பிறர் நலம் பேணுதல் (Altruism ) 2. நன்மை செய்ய விரும்புதல் (Benevolence) 3. அறம் (Charity) 4. உதவுகின்ற (Helpfulness) 5. தயாராக இருப்பது (Readiness) 6. ஞாபகம் வைத்தல் (Remembrance) 7. தொண்டு செய்தல் (Service) 8. ஞாபகசக்தி (Tenacity) 9. மன்னித்தல் (Forgiveness)

கடகராசி மண்டலமானது ஐம்புலன் மண்டலத்தின் ஆதாரமாகும்.

**சிம்மம்** : 1. வாக்குறுதி (Commitment) 2. ஒத்துழைப்பு (Cooperativeness) 3. சுதந்திரம் (திக்ஷீமீமீபீஷீனீ) 4. ஒருங்கிணைத்தல் (Integrity) 5. பொறுப்பு (Responsibility) 6. ஒற்றுமை (Unity) 7. தயாள குணம் (Generosity) 8. இனிமை (Kindness) 9. பகிர்ந்து கொள்ளுதல் (Sharing)

சிம்மராசி மண்டலமானது தசை மண்டலத்தின் ஆதாரமாகும்.

**கன்னி** : 1. சுத்தமாயிருத்தல் (Cleanliness) 2. அருள் (Charisma) 3. தனித்திருத்தல் (Detachment) 4. சுதந்திரமான நிலை (Independent) 5. தனிநபர் உரிமை (Individualism) 6. தூய்மை (Purity) 7. உண்மையாக (Sincerity) 8. ஸ்திரத்தன்மை (Stability) 9. நல்ஒழுக்கம் (Virtue ethics)



கன்னிராசி மண்டலமானது தோல் மண்டலத்தின் ஆதாரமாகும்.

**துலாம்** : 1. சமநிலை காத்தல் (Balance) 2. பாரபட்சமின்மை (Candor) 3. மனஉணர்வு (Conscientiousness) 4. உள்ளத்தின் சமநிலை (Equanimity) 5. நியாயம் (Fairness) 6. நடுநிலையாக (Impartiality) 7. நீதி (Justice) 8. நன்னெறி (Morality) 9. நேர்மை (Honesty)

துலாராசி மண்டலமானது சுவாச மண்டலத்தின் ஆதாரமாகும்.

**விருச்சிகம்** : 1. கவனமாக இருத்தல்(Attention) 2. விழிப்புணர்வுடன் இருத்தல் (Awareness) 3. எச்சரிக்கையாக இருத்தல் (Cautiousness) 4. சீரிய யோசனை (Consideration) 5. பகுத்தறிதல் (Discernment) 6. உள் உணர்வு (Intuition) 7. சிந்தனைமிகுந்த (Thoughtfulness) 8. கண்காணிப்பு (Vigilence) 9. அறிவுநுட்பம் (Wisdom)

விருச்சகராசி மண்டலமானது நிணநீர் மண்டலத்தின் ஆதாரமாகும்.

**தனுசு**: 1. லட்சியம் (Ambition) 2. திடமான நோக்கம் (Determination) 3. உழைப்பை நேசிப்பது Diligence) 4. நம்பிக்கையுடன் (Faithfulness) 5. விடாமுயற்சி (Persistence) 6. சாத்தியமாகின்ற (Potential) 7. நம்பிக்கைக்குரிய (Trustworthiness) 8. உறுதி (Confidence) 9. ஊக்கத்துடன் முயற்சி (Perseverance)

தனுசு ராசி மண்டலமானது எலும்பு மண்டலத்தின் ஆதாரமாகும்.

**மகரம்**: 1. கண்ணியம் (Diginity) 2. சாந்த குணம் (Gentleness) 3. அடக்கம் (Moderation) 4. அமைதி (Peacefulness) 5. சாதுவான (Meekness) 6. மீளும் தன்மை (Resilience) 7. மௌனம் (Silence) 8. பொறுமை (Patience) 9. செழுமை (Wealth)

மகரராசி மண்டலமானது நாளமுள்ள சுரப்பி மண்டலத்தின் ஆதாரமாகும்.

**கும்பம்** : 1. சுய அதிகாரம் (Autonomy) 2. திருப்தி (Contentment) 3. மரியாதை (Honor) 4. மதிப்புமிக்க (Respectfulness) 5. கட்டுப்படுத்துதல் (Restraint) 6. பொது கட்டுப்பாடு (Solidarity) 7. புலனடக்கம் (Chasity) 8. தற்சார்பு (Self Reliance) 9. சுயமரியாதை (Self-Respect)

கும்பராசி மண்டலமானது நாளமில்லா சுரப்பி மண்டலத்தின் ஆதாரமாகும்.

**மீனம்** : 1. உருவாக்கும் கலை (Creativity) 2. சார்ந்திருத்தல் (Dependability) 3. முன்னறிவு (Foresight) 4. நற்குணம் (Goodness) 5. சந்தோஷம் (Happiness) 6. ஞானம் (Knowledge) 7. நேர்மறை சிந்தனை (Optimism) 8. முன்யோசனை (Prudence) 9. விருந்தோம்பல் (Hospitality)

மீனராசி மண்டலமானது இரத்த ஓட்ட மண்டலத்தின் ஆதாரமாகும்.

# 27 நட்சத்திரத்திற்குரிய காயத்திரி மந்திரம்

மனிதர்களாக பிறந்த அனைவரும் பல்வேறு கர்மாக்களை அனுபவித்தே தீர வேண்டும் என்பது நியதி. நன்மை செய்தால் நல்ல பலனும், தீயவைக்கு உரிய தண்டனை என்ற முறையில் நமது புராணங்கள் பல்வேறு வழிமுறைகளை கூறியுள்ளது. நன்மை ஏற்பட்டால் மகிழ்கிறோம். தீய பலனைக் கண்டு அஞ்சுகிறோம்.



தக்காளி விதையை போட்டுவிட்டு கத்தரிக்காய் முளைக்கும் என்று காத்திருப்பது முட்டாள்தனம். ஆனால் எதையும் ஏற்கும் மன நிலையை வளர்த்துக் கொள்வது மட்டுமே மனித அறிவுக்கு உகந்தது. இதற்கு பல்வேறு வழிமுறைகளை நமது முன்னோர்கள் வகுத்துள்ளனர். அந்த வகையில் பல்வேறு பிரச்சனைகளை எளிதாக தீர்க்கும் காயத்ரி மந்திரத்தை முன்னோர் படைத்தது மட்டுமின்றி. ஒவ்வொரு மனிதனின் பிறந்த நட்சத்திரத்திற்குரிய காயத்திரி மந்திரத்தையும் கூறியுள்ளனர்.

அந்த அந்த நட்சத்திரத் திற்குரிய காயத்திரியை தினமும் மனதார கூறி வந்தால் மன தைரியம் கிடைப்பதுமட்டுமின்றி பல்வேறு இடையூறுகளின் தீவிரத்தை, காட்டாற்று வெள்ளத்தை தடுத்து அமைதிப்படுத்தும் தடுப்பு களைப் போன்று, காயத்ரி மந்திரத்தின் சக்தி தடுக்கும் என்றும் கூறியுள்ளனர்.

27 நட்சத்திரங்களில் பிறந்தோருக்கும் துன்பங்கள் தீர்க்கும் காயத்ரி மந்திரங் கள் உங்கள் நட்சத்திர காயத்ரி மந்திரத்தை மனப் பாடம் செய்து தினமும் குறைந்தது 9 முறையாவது சொல்லுங்கள். வாழ்க்கையில் மிகச்சிறந்த முன்னேற்றம் காணலாம்.

www.aanmeegamalar.com





**அஸ்வினி:**
ஓம் ஸ்வேத வர்ண்யை வித்மஹே சுதாகராயை தீமஹி தன்னோ அச்வநௌ ப்ரசோதயாத்

**பரணி:**
ஓம் க்ருஷ்ணவர்னாயை வித்மஹே தண்டதராயை தீமஹி தன்னோ பரணி ப்ரசோதயாத்

**கிருத்திகை:**
ஓம் வன்னிதேஹாயை வித்மஹே மஹாதபாயை தீமஹி தன்னோ க்ருத்திகா ப்ரசோதயாத்

**ரோஹிணி:**
ஓம் ப்ராஜாவிருத்யைசவித்மஹே விச்வரூபாயை தீமஹி தன்னோ ரோஹினி ப்ரசோதயாத்

**மிருகசீரிடம்:**
ஓம் சசிசேகராய வித்மஹே மஹாராஜாய தீமஹி தன்னோ ம்ருகசீர்ஷா ப்ரசோதயாத்

**திருவாதிரை:**
ஓம் மஹா ச்ரேஷ்டாய வித்மஹே பசும்தநாய தீமஹி தன்னோ ஆர்த்ரா ப்ரசோதயாத்ப்

**புனர்பூசம்:**
ஓம் ப்ரஜாவ்ருத்யைச வித்மஹே அதிதிபுத்ராய த தீமஹி தன்னோ புனர்வஸு ப்ரசோதயாத்

**பூசம்:**
ஓம் ப்ரம்ம்வர்ச்சஸாய வித்மஹே மஹா திஷ்யாய தீமஹி தன்னோ புஷ்ய ப்ரசோதயாத்

**ஆயில்யம்:**
ஓம் ஸர்பராஜாய வித்மஹே மஹா ரோசனாய தீமஹி தன்னோ ஆச்லேஷ ப்ரசோதயாத

**மகம்:**
ஓம் மஹா அனகாய வித்மஹே பித்ரியா தேவாய தீமஹி தன்னோ மகஃப்ரசோதயாத்

**பூரம்:**
ஓம் அரியம்நாய வித்மஹே பசுதேஹாய தீமஹி தன்னோ பூர்வபால்குநீ ப்ரசோதயாத்

**உத்திரம்:**
ஓம் மஹாபகாயை வித்மஹே மஹாச்ரேஷ்டாயை தீமஹி தன்னோ உத்ரபால்குநீ ப்ரசோதயாத்

**அஸ்தம்:**
ஓம் ப்ரயச்சதாயை வித்மஹே ப்ரக்ருப்ணீதாயைதீமஹி தன்னோ ஹஸ்தா ப்ரசோதயாத்

**சித்திரை:**
ஓம் மஹா த்வஷ்டாயை வித்மஹே ப்ரஜாரூபாயை தீமஹி தன்னோசைத்ரா ப்ரசோதயாத்

**சுவாதி:**
ஓம் காமசாராயை வித்மஹே மகாநிஷ்டாயை தீமஹி தன்னோ சுவாதி ப்ரசோதயாத்

**விசாகம்:**
ஓம் இந்த்ராக்நௌச வித்மஹே மஹாச்ரேஷ்ட்யைச தீமஹி தன்னோ விசாகா ப்ரசோதயாத்

**அனுஷம்:**
ஓம் மித்ரதேயாயை வித்மஹே மஹா மித்ராய தீமஹி தன்னோ அனுராதா ப்ரசோதயாத்

**கேட்டை:**
ஓம் ஜயேஷ்டாயை வித்மஹே மகா ஜய்ஷ்ட்யாயை தீமஹி தன்னோஜ்யேஷ்டா ப்ரசோதயாத்

**மூலம்:**
ஓம் ப்ராஜாதிபாயை வித்மஹே மஹப்ராஜையை தீமஹி தன்னோ மூலாப் ப்ரசோதயாத்

**பூராடம்:**
ஓம் சமுத்ரகாமாயை வித்மஹே மஹாபிஜிதாயை தீமஹி தன்னோ பூர்வாஷாடா ப்ரசோதயாத்

**உத்திராடம்:**
ஓம் விஸ்வேதேவாய வித்மஹே மஹா ஷாடாய தீமஹி தன்னோ உத்ராஷாடா ப்ரசோதயாத்

**திருவோணம்:**
ஓம் மஹா ச்ரோணாய வித்மஹே புண்யஸ்லோகாய தீமஹி தன்னோ ச்ரோணா ப்ரசோதயாத்

**அவிட்டம்:**
ஓம் அக்ர நாதாய வித்மஹே வஸூபரீதாய தீமஹி தன்னோ சரவிஹ்டா ப்ரசோதயாத்

**சதயம்:**
ஓம் பேஷஜயா வித்மஹே வருண தேஹா தீமஹி தன்னோ சதபிஷக் ப்ரசோதயாத்

**பூரட்டாதி:**
ஓம் தேஜஸ்கராய வித்மஹே அஜஏகபாதாய தீமஹி தன்னோ பூர்வப்ரோஷ்டபத ப்ரசோதயாத்

**உத்திரட்டாதி:**
ஓம் அஹிர் புத்ந்யாய வித்மஹே ப்ரதிஷ்டாபநாய தீமஹி தன்னோ உத்ரப்ப்ரோஷ்டபதப்ரசோதயாத்

**ரேவதி:**
ஓம் விச்வரூபாய வித்மஹே பூஷ்ண தேஹாய தீமஹி தன்னோ ரைய்வதி ப்ரசோதயாத்

எங்களுடன் நீங்களும் இணையுங்கள்
www.aanmeegamalar.com
இணையதளம் மூலம்
உலக அளவில் முதன்முறையாக வெளிவரும்
இலவச e-mail-book
ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
மாதமிருமுறை-இமெயில் புத்தகத்தின் வாசகர்களாகிய நீங்கள் உங்களுக்கு தெரிந்த ஆன்மிக அன்பர்களிடம் நமது இதழையும் அதை பெறும் வழிமுறைகளையும் சொல்லி புதிய வாசகர்களுக்கு வழிகாட்டுங்கள்.
இலவச மெயில் புத்தகம் பெற




உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டிய முகவரி
aanmeegamalar@gmail.com
Whatsup no.7299992699
முடிந்த அளவு Share செய்து இத்தகவல் பரவ உதவுங்கள்

www.aanmeegamalar.com





# உலகம் எப்போது தோன்றியது?

## ஆதாரத்தை தேடும் விஞ்ஞானம் ஆதாரத்துடன் கூறும் இந்துமதம்

சுமார் 200 கோடி ஆண்டுகளுக்கு முன்பு உலகம் தோன்றியதாக இன்றைய விஞ்ஞானிகள் கஷ்டப்பட்டு ஆராய்ச்சி செய்து, எந்த விதமான ஆதாரத்தையும் காட்டாமல் தங்களது ஆராய்ச்சி முடிவை மட்டும் மக்களிடம் கூறி பெருமைப்பட்டுக் கொண்டுள்ளனர்.

ஆனால் உலகம் தோன்றியது முதல் நடைபெற்ற நிகழ்வை இந்து மதம் மிகத் துல்லியமாக ஆதாரப்பூர்வமாக வைத்துள்ளது என்பதுதான் உண்மை.

இன்றைய விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியின் முடிவுகள் அனைத்தும் இந்துக்களின் காலக்கணக்குடன் பொருத்தமாக இருப்பதிலிருந்தே இந்து மதத்தின் சிறப்பை அறிந்து கொள்ளலாம்.

- கி.மு1,98,67,71,100 கல்பம் ஆரம்பம், உலகப்படைப்பு !
- கி.மு1,96,08,51,100 1 ஆம் மன்வந்ரம்,மனிதர் உயிர்களும் படைப்பு
- கி.மு1,65,41,31,100 2 ஆம் மன்வந்ரம்
- கி.மு13,47,41,11,100 3 ஆம் மன்வந்ரம்
- கி.மு1,04,06,91,100 4 ஆம் மன்வந்ரம்
- கி.மு73,39,71,100 5 ஆம் மன்வந்ரம்
- கி.மு42,72,51,100 6 ஆம் மன்வந்ரம்
- கி.மு12,05,31,100 பிரளய முடிவு, தற்போது உள்ள ஏழாம் மன்வந்ரம் ஆரம்பம், இக்ஷுவாகு வம்சம்
- கி.மு 38, 90,100 சத்திய யுகம் ஆரம்பம், 28வது சதுர்யுகம்
- கி.மு21,05,102 சூரிய சித்தாந்தம்
- கி.மு 3138 மகாபாரத போர், யுதிஷ்டிரர் முடிசூட்டு, யுதிஷ்டிர சகம் கி.மு 8,69,100 இராமபிரானின் காலம்
- கி.மு 3102 கலியுகம் ஆரம்பம்
- கி.மு 509 புத்தர் தோற்றம்
- கி.மு.57 விக்ரமாதித்ய சகம் வருடம்
- கி.பி 58 சாலி வாகன சக வருசம்
- கி.பி. 788 ஆதி சங்கரர் தோற்றம்
- கி.பி.1192 முஸ்லீம் ஆட்சி துவக்கம்
- கி.பி 1847 பிரிட்டிஷ் ஆட்சி துவக்கம்
- கி.பி.1947 பாரத சுதந்திரம்
- கி.பி.2000 பாரதத்தின் பெருமையை வேகமாக பரவுகின்றது.
- கி.பி.2016 உலகம் தோன்றியது முதல் இந்துக்கள் பாதுகாத்து வரும் கணக்கை நாம் தற்போது படித்துக் கொண்டிருப்பது.



www.aanmeegamalar.com



## சிவபுராணம் கூறும்

# விபூதியின்

## அற்புதம் வாய்ந்த மகத்துவம்

திருநீரு என்றழைக்கப்படும் விபூதியை அணிபவரை சிவ அம்சமாக கருதி வணங்க வேண்டும். சாதாரண மனிதன் விபூதி தரிக்கும் போது சிவ அம்சமாகவே மாறிவிடுகிறான். அவ்வளவு சக்தி வாய்ந்த விபூதியின் பெருமை களை சிவ புராணம் மிக அழகாக கூறியுள்ளது.

பிருகு வம்சத்தில் தோன்றிய அந்தணர் ஒருவர் இருந்தார். நீண்டகாலம் அவர் தவம் புரிந்து வந்தார். ஆண்டவன் சிவன் நினைவில் அவர் ஆனந்தக் கூத்தாடினார். அவர் கையில் தர்ப்பை பட்டு இரத்தம் வடிந்தது.

எதையும் உணரும் நிலையில் அவர் இல்லை. உடனே சிவபெருமாள் அறுபட்ட அவரின் விரலை அகற்ற அதில் இருந்து பால் வடிந்தது. சற்று நேரம் கழித்து அவரின் விரலில் திருநீறு கொட்டியது.

தன் கையில் திருநீறு கொட்டுவதைக் கண்ட அவர் சிவனைப் பணிந்தார். சிவ பெரு மாள் அவருக்கு முக்தி அளித்தார். அன்னை பார்வதியிடம் விபூதியின் மகிமையை விளக்கினார்.

விபூதி அணிந்து கொள்வது புனித நதிகளில் நீராடுவதை விடவும் சிறந்தது.



தேவர்களும், முனிவர்களும் விபூதி அணிந்து அதன் மூலம் முக்தி பெறுகிறார்கள்.

மேலும் விபூதி பூசியவர்கள் பிசாசு, அரக்கர், எமன், கிரகங் களைக் கண்டால் அஞ்ச வேண் டியது இல்லை. அவர்கள் வாழ்நாள் முடிந்த பிறகும் கூட முக்தி அடைந்து சிவ பேறு அடைவார்கள்.

பிரம்மன் ஒருமுறை விபூதியை ஒரு தட்டிலும் மற்றொரு தட்டில் சொர்க்கம் போன்ற உலகங் களையும் வைத்த போது விபூதியே மேலானதாக விளங்கியது. விபூதி கங்கையின் புனித நீரை விடவும் சிறந்தது.

விபூதி அணிவது தவங்களை விடவும் சிறந்தது. அதனை அணியும் மனிதர்கள் புனிதர்கள் ஆகி விடுகிறார்கள் என்று விபூதி யின் மகிமை பற்றி சிவ புராணம் கூறுகிறது.

திருநீறு பூசும்போது திசை களையும் நாம் கவனிக்க வேண்டும்.

காலையில் கிழக்கு நோக்கியும்,
மதியம் வடக்கு நோக்கியும்,
மாலை மேற்கு நோக்கியும் பூசிக் கொள்ள வேண்டும்.

இது அனுஷ்டானத்திற்கும், வீட்டில் இட்டுக் கொள்வதற்கும் பொதுவானது. கோயிலில் பிரசாத மாகப் பெறும் பொழுது சுவாமியைப் பார்த்துப் பூசிக் கொள்ள வேண்டும்.



## எந்த விரல் மூலம் விபூதி பூசவேண்டும்

விபூதியை எந்த விரல்களில் பூச வேண்டும், எந்த விரல்களில் பூசக்கூடாது. அவ்வாறு விரல்களின் மூலம் பூசினால் என்ன பலன் என்பதையும் நமது முன்னோர்கள் அழகாக கூறியுள்ளனர்.

விபூதியை எடுக்க சில விரல்களை பயன் படுத்தும் போதும் தீமையும், சில விரல்களை பயன்படுத்தும்போது அதீத நன்மைகளும் ஏற்படும். ஆகவே விபூதியை எடுக்கும்போது, கீழே குறிப்பி ட்டுள்ள வரிகளில் உள்ள முறைகளை பயன்படுத்தி, மிகவும் கவனமாக எடுத்து அணியவேண்டும்.

**கட்டை விரல்:** கட்டை விரலால் விபூதியை தொட்டு அணிந்தால் தீராத வியாதி வரும்.

**ஆள் காட்டி விரல்:** ஆள் காட்டி விரலால் விபூதியை தொட்டு அணிந்தால் பொருட் கள் நாசம்.

**நடுவிரல்:** நடுவிரலால் விபூதியை தொட்டு இட்டுக்கொண்டால் அணிந்தா ல் நிம்மதியின்மை.

**மோதிர விரல்:** மோதிர விரலால் விபூதியை தொட்டுக்கொண்டு அணிந்தால் மகிழ்ச்சியான வாழ்க்கை.

**சுண்டு விரல்:** சுண்டு விரலால் விபூதியை தொட்டு அணிந்தால் கிரகதோஷம் எற்படும்.

மோதிர விரல் கட்டை விரல்

மோதிர விரலாலும், கட்டை விரலாலும் சேர்த்து விபூதியை எடுத்து மோதிர விர லால் விபூதியை இட்டுக் கொணடால் உலகமே வசப்படம். எடுக்கும் முயற்சி வெற்றி பெரும்.





ஆன்மிகமலர் மெயில் புக்
1-15 அக்டோபர் 2016 13
www.aanmeegamalar.com

# சங்கடகரா சதுர்த்தி

## மகிமையும் விரத முறையும்



பிள்ளையாரை வழிபட சங்கடகர சதுர்த்தி நாள் மிகவும் ஏற்றது. பவுர்ணமியை அடுத்த நான்காம் நாள் தேய்பிறையில் வரும் சதுர்த்தி நாளையே 'சங்கடஹர சதுர்த்தி' என்பர். சங்கடங்களை அழிப்பதால் இது சங்கடஹர சதுர்த்தி எனப்படுகிறது.

சங்கடஹர சதுர்த்தி வரலாறு

நம் இந்து தர்மத்திலே எண்ணற்ற விரதங்களும் பூஜைகளும் உண்டு. எண்ணற்ற தெய்வங்களும் எண்ணற்ற விரதங்களும் இருந்தாலும் முழு முதல் கடவுளாம் முக்கண் கணபதிக்கு வழிபடும் விரதங்களில் இரண்டு முக்கியமானவை அதில் ஒன்று சுக்கில சதுர்த்தி விரதம். மற்றொன்று சங்கடஹர சதுர்த்தி விரதம்.

நம்முடைய சங்கடங்களை நீக்கும் இந்த விரதம் ஒவ்வொரு மாதமும் கிருஷ்ணபட்ச சதுர்த்தி திதி (தேய்பிறைசதுர்த்தி) அன்று வருகிறது.

அன்றைய தினம் விரதம் இருந்து கணபதியை தொழுவோரின் கஷ்டங்கள் பனிபோல விலகும் என்பது நம்பிக்கை.

விநாயகர் எளிமையான கடவுள், எளிதில் கிடைக்கும் அருகம்புல், எருக்கு போன்ற பத்திரங்களாலும் பூக்களாலும் அர்ச்சித்தாலும் ஏற்றுக் கொள்ள கூடியவர்.

வெல்லம், கொழுக்கட்டை, எள்ளுருண்டை போன்ற பொருட்களை நிவேதனம் செய்து மகிழ்வார்.

அத்தகைய கடவுளுக்கு மனம் குளிர விரதம் இருந்து வழிபட்டால் புத்திர பாக்கியம் கிட்டும் என்கிறது விநாயக புராணம்.

காவிரி நதி தீரத்தில் சகல சம்பத்துக்களும் நிறைந்த பட்டினத்தை ஆண்டு வந்த கிருத வீரியன் என்ற மன்னனுக்கு புத்திர பாக்கியம் இல்லை. இதனால் அவன் காட்டிற்கு சென்று கடும் தவம் மேற்கொண்டான்.

கிருத வீரியனின் தந்தை தன் மகனுக்கு எதனால் பிள்ளையில்லை என்று பிரம்ம தேவனிடம் கேட்டார்.

அப்போது பிரும்ம தேவர்., கிருத வீரியன் முற்பிறவியில் சாம்பன் என்ற அந்தணர் வம்சத்தில் பிறந்தான்.

அவனுக்கு கணேசன் என்ற மகனும் இருந்தான். துன்பம் அவர்களை பீடிக்கவே வறுமையில் வாடினர். பலநாள் உணவின்றி கஷ்டப்பட்டனர். வறுமை அவர்களை வாட்டி எடுத்தது. ஒரு வேளை ஆகாரத்திற்கும் வழி இல்லாமல் போகவே சாம்பன் காட்டிற்கு சென்று வழிப்பறி செய்ய முடிவெடுத்தான். அப்போது காட்டில் பன்னிரெண்டு அந்தணர்கள் சென்று கொண்டிருந்தனர்.

சாம்பன் அவர்களை மடக்கி அவர்களை கொன்று அவர்கள் வைத்திருந்த பொருட்களை கவர்ந்து கொண்டு இல்லம் வந்தான்.

வீடு உட்புறம் தாழிட்டு இருக்கவே தன் மகனை மூன்று தரம் கணேசா! கணேசா! கணேசா! என்று குரல் கொடுத்து அழைத்தான்.

பதில் வராது போகவே கதவை உடைத்து உள்ளே நுழைந்தான்.

பாவம் பலநாள் பசிக் கொடுமையினால் அவனது மகன் கணேசன் உயிர் பிரிந்து போயிருந்தது.

இதைக்கண்ட சாம்பன் இரவு முழுதும் மகன் மீது விழுந்து அழுது அவனும் இறந்தான்.

அன்றைய தினம் சங்கடஹர சதுர்த்தி அனுஷ்டிக்கும் நாள்.

முதல் நாள் முழுவதும் அன்ன ஆகாரம் இன்றி அன்றைய தினம் உயிரை விட்டமையால் கணேசனை விண்ணுலகம் அழைத்துச் செல்ல விமானம் வந்தது.

அவன் சொர்க லோகத்தை அடைந்தான்.

அன்றைய தினமே சாம்பனும் இறந்திருந்தாலும் அந்தணர்களை கொன்ற ப்ரும்ம ஹத்தி சாம்பனை பீடித்துக் கொண்டது.

இருப்பினும் சங்கட சதுர்த்தி அன்று மகனை கணேசா என்று மூன்று முறை அழைத்தமையால் அவனுக்கு இப்பிறவியில் அரசனாக பிறக்கும் வாய்ப்பு கிடைத்தது.

ஆனாலும் பிரும்ம ஹத்தி தோஷம் தொடர்வதால் பிள்ளை பிறக்காமல் இருக்கிறது.

அந்த தோஷம் நீங்க சங்கடஹர சதுர்த்தி விரதம் இருந்தால் நிவர்த்தி ஆகி பிள்ளை பிறக்கும் என்று சொன்னார் ப்ரம்மா. கிருத வீரியனும் இந்த விரதத்தை அனுஷ்டித்து பிள்ளைப் பேறு பெற்றான்.

இதைப் போன்று இன்னொரு சம்பவமும் சங்கடஹர சதுர்த்தியின் மகிமையை கூறுகிறது.

கர்வ மிகுதியால் பிள்ளையாரின் கோபத்துக்கு ஆளான சந்திரன் தன் உடலில் பொலிவிழந்து வருந்தினான். இறுதியில் பிள்ளையாரிடமே சரணடைந்தான். பிள்ளையார் அருள்புரிந்ததோடு சங்கடஹர சதுர்த்தி உதய நேரத்தில் எம்மை பூஜிப்பவர் யாவருக்கும் இன்னல்கள் நீக்கி அருள்புரிவேன் என்றருளினார்.

சங்கடஹர சதுர்த்தி தினத்தில் விநாயகருக்குரிய "ஓம் தத் புருஷாய வித்மஹே வக்ர துண்டாய தீமஹி தன்னோ தந்தி ப்ரசோதயாத்" எனும் கணேச காயத்ரீ மந்திரத்தையும், தமிழில் விநாயகர் அகவலையும் பாடி தொந்திக் கணபதியை தியானித்தால் கூடுதல் பலன் உண்டு.

விநாயகர் தோத்திரங்களை மனமுருக பாடி விநாயகரை நெஞ்சில் நிறுத்தி விரதம் மேற்கொள்ள வேண்டும். விநாயகப் பெருமானை வழிபடுவோரை சனி பிடிப்பதில்லை! விக்கினங்கள் அகலும்! வேதனைகள் மறையும்!

ஆகவே சங்கடஹர சதுர்த்தி நாளில் அதிகாலையில் நீராடி, விரதமிருந்து பிள்ளையாரை வழிபட நல்ல பலன் கிட்டும் என்பது ஐதீகம். சங்கடஹர சதுர்த்தி அன்று மாலை வரை உணவு அருந்தாமல் விரதம் இருக்க வேண்டும்.

முடியாதவர்கள் நீர் ஆகாரம் மட்டும் அருந்தி விரதமிருக்கலாம்.மாலையில் அருகில் உள்ள விநாயகர் கோவிலுக்கு சென்று நெய் விளக்கு ஏற்றி அங்கு நடக்கும் பூஜையில் கலந்து கொண்டு விரதத்தை நிறைவு செய்ய வேண்டும்.


ஆன்மிகமலர் மெயில் புக்







# ஸ்ரீசத்ரு சம்ஹார மூர்த்தி அடிகளாரின் குருபூஜை

ஸ்ரீசத்ரு சம்ஹார மூர்த்தி அடிகளாரின் ஜெயந்தி விழா சமீபத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் பொதுமக்கள் பெரும்பாலானோர் கலந்து கொண்டு அடிகளாரின் ஆசிரியை பெற்றுச் சென்றனர்.

ஸ்ரீசத்ரு சம்ஹார மூர்த்தி அடிகளரைப் பற்றி எளிய வரலாறு:

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா அன்புகோவில் கிராமத்தை சேர்ந்தவர்கள் நல்லமுத்து பிள்ளை, பொன்னம்மாள் தம்பதி. இவர்கள் திருச்சி மாவட்டம் வாதிரிப்பட்டியில் குடியிருந்தனர். இவர்களுக்கு மூன்றாவது குழந்தையாக 13.6.1880ல் ஸ்ரீசத்ரு சம்ஹார மூர்த்தி பிறந்தார். அவருக்கு கனகசபாபதி என பெயரிடப்பட்டது. 1901ம் ஆண்டு இவருக்கும், மாமன் மகள் சொர்ணத்தம்மாளுக்கும் திருமணம் நடந்தது. பொன்னமராவதியில் அரசு ஆசிரியராக வேலை பார்த்தார். நல்ல நூல்களை படிக்கும் வழக்கத்தை குருநாதர் மேற்கொண்டார். 1915ம் ஆண்டு சிதம்பரம் கோயில் கும்பாபிஷேகததிற்கு சென்ற குருநாதர் ஆறுமாதம் வரை வீடு திரும்பவில்லை. ஓராண்டு கழித்து குருநாதர் கண்டுபிடிக்கப்பட்டார். 1917ம் ஆண்டு மீண்டும் எங்கே சென்றார் என்றே தெரியவில்லை. 11 ஆண்டுகள் கடந்த பின்னர் 1928ம் ஆண்டு திருச்சி நந்திகோவில் தெருவில் உள்ள நாகநாத சுவாமி கோயிலில் தவக்கோலத்தில் அடிகளார் கண்டுபிடிக்கப்பட்டார். அதன்பின்னர் அவர் நிகழ்த்திய அற்புதங்கள் ஏராளம்.

திருச்சி கோர்ட் வளாகத்தில் உள்ள மகிழ மரத்தடியில் ஸ்ரீசத்ரு சம்ஹார மூர்த்தி அடிகளார் அமர்ந்து தியானம் செய்வது வழக்கம். ஒரு சமயம் சோழமாதேவி கிராமத்தைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் பிள்ளை என்பவர், குருநாதரிடம் தனது வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று வேண்டினார். குருநாதரும் அவ்வாறே தள்ளு படியாகும் என்று கூறி திருநீறு அளித்தார். அதன்படியே ஞானப்பிரகாசம் பிள்ளையின் வழக்கை நீதிபதி தள்ளுபடி செய்தார். அது முதல் குருநாதரிடம் அவருக்கு நெருக்கம் அதிகமானது. இந்நிலையில் குருநாதர் கோர்ட் வளாகத்தில் பூஜை செய்து கொண்டிருந்தார். இதைகண்ட போலீஸ் அதிகாரி ஒருவர் குருநாதரை தனது பூட்ஸ் காலால் எட்டி உதைத்தார். ஞானப்பிரகாசம் பிள்ளை ஓடிச்சென்று தடுத்து, குருநாதரை சோழமாதேவியில் தன் வீட்டில் தங்க வைத்தார். குருநாதரை எட்டி உதைத்த போலீஸ் அதிகாரிக்கு கை கால்கள் செயல இழந்தது. தான் செய்த செயலால்தான் இது போல் நடைபெற்றது என் பதை உணர்ந்த அந்த அதிகாரி. சுவாமிகளை தேடி வந்தார். குருநாதரும் மன்னித்து ஆசி வழங்கினார். அதன் பின்னர் அந்த அதிகாரி சுவாமிகளை மீண்டும் கோர்ட் வளாகத்திற்கே அழைத்து வந்து பணிவிடை செய்தார்.

குருநாதர் 11.10.1938 செவ்வாய்கிழமை பரணி நட்சத்திரத்தில் காலை 6.15 மணிக்கு திருச்செந்தூர் திருமுன்பில் ஸ்ரீசத்ரு சம்ஹார மூர்த்தி அடிகள் எனப் பெயர் பெற்று ஒளிவடிவாய் அமைதி ஆலயம் பெற்றார். பின்னர் திருச்சி கோர்ட் வளாகத்தில் தீயணைப்பு நிலையம் அருகில் உள்ள மகிழ மரத்தடியில் சுவாமிகளுக்கு அழகிய கோயில் கட்டப்பட்டு பூஜைகள் நடந்து வருகிறது. குருநாதர் தியானம் செய்த மகிழ மரத்தை சுற்றி சுவர் எழுப்பி, கல்வெட்டு வைக்கப்பட்டது. 1985ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. தீய ணைப்பு வீரர்களுக்கு இவர் மீது பக்தி அதிகம் என்பதால் திருச்சி ஸ்ரீரங்கம், துறையூர், ஜெயங்கொண்டம், பெரம்பலூர், புதுக்கோட்டை, அறந்தாங்கி, திருமயம், இலுப்பூர், ஆலங்குடி, நாகப்பட்டினம், நன்னி லம், கரூர், பட்டுக்கோட்டை, பேராவூரணி ஆகிய ஊர்களில் உள்ள தீயணைப்பு நிலையங்களில் குருநாதரின் ஆலயம் அமைந்துள்ளது. வியாழக்கிழமைகளில் பூஜையும், ஆண்டுதோறும் குருபூஜையும் நடந்து வருகிறது.

– வாசகர்: டி.கார்த்திகேயன்
போன்: 96776 95920



# பெருமாள் கோவில் நிர்மால்ய பணி...

சிறுமயிலூர் என்கிற ஜமீன் கிராமம் சென்னையிலிருந்து சுமார் 150 கி.மீ. தொலைவில், மதுராந்தகத்திற்கு அருகில் உள்ளது. மதுராந்தகத்திலிருந்து சூணம்பேது செல்லும் சாலையில் 22வது கி.மீ.உள்ள புத்திரன் கோட்டை என்கிற கிராமத்திலிருந்து மேற்கே தொழுப்பேடு செல்லும் சாலையில் 7வது கி.மீ. உள்ளது.

இந்த ஊரில் சுமார் 1000 வருடங்களுக்கு முன்பாக வெங்கடேச பெருமாளுக்கு கோயில் கட்டப்பட்டிருந்தது. முறையான பராமரிப்பில்லாமையால் பல ஆண்டுகளாக பழுதடைந்து முற்றிலுமாக சிதைந்து விட்டது.

இந்த கிராமத்தைச் சேர்ந்த பகல்தீவட்டியார் வம்சத்தில் கடைசி திவான் பகதூரின் ஐந்தாவது வாரிசைச் சேர்ந்த திரு. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரின் வாரிசுகளின் முயற்சியால் மேற்படி கிராமத்தைச் சேர்ந்தவர்களின் சம்மதத்துடன் தற்போது இந்த ஆலயத்தை புதிதாக கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது. 3 ஏக்கர் நிலத்தில் 1.2 கோடி ரூபாய் செலவில் இந்தத் திருக்கோயில் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த கைங்கர்யத்தில் பங்கு பெற விரும்புபவர்கள் சிறுமயிலூர் ராஜ்குமார் (தொலைபேசி எண் 9962098333 / 044–45538471) என்ற அன்பரைத் தொடர்பு கொள்ளலாம்.


ஆன்மிகமலர் மெயில் புக்



# மகிமைகள் நிறைந்த நவராத்திரி





தனம்தரும், கல்வி தரும், ஒருநாளும் தளர்வு அறியா மனம் தரும், நல்லன எல்லாம் தரும் “அபிராம வல்லியை” வணங்கும் நவராத்திரி விரதம்



சிவபெருமானுக்கு சிவராத்திரி விரதம் இருப்பதை போன்று அம்பாளுக்கு உகந்தது நவராத்திரி விரதம் ஆகும் இந்த நவராத்திரியில் ஒன்பது நாட்களை மூன்று மூன்று நாட்களாக பிரித்து மூன்று தேவிகளுக்கு உரிய பூஜைகள் நடைபெறும்.

முதல் மூன்று நாள்கள் தமோ குண சஞ்சாரியான ஸ்ரீதுர்கா பரமேஸ்வரியை வீரத்தையும், தைரியத்தையும் வேண்டியும், அடுத்த மூன்று நாள்கள் ராஜோ குண சொரூபியான ஸ்ரீ மகாலட்சுமியை சகல செல்வங்களையும் வேண்டியும், கடைசி மூன்று நாள்கள் சாத்வீகக் குண சொரூபியான ஸ்ரீ சரஸ்வதியை கல்வி, அறிவு, சகல கலை ஞானங்கள் என்பவற்றை வேண்டியும் வணங்குகின்றோம்.



புரட்டாசி மாதத்தில் நவக்கிரகங்களில் நாயகமாக உள்ள சூரியன், கன்னி இராசியில் சஞ்சரிக்கும் காலம் தட்சணாயண காலமாகும். இக்காலம் தேவர்களுக்கு இராக்காலமாகும். உத்தராயணத்தில் வசந்த நவராத்திரியும்; தட்சணாயன காலத்தில் சாரதா நவராத்திரியும் தேவியைப் பூசிக்கச் சிறந்த காலமாகும். இவை இரண்டிலும் புரட்டாசி மாதத்தில் அனுஷ்டிக்கப்படும் சாரதா நவராத்திரி தினங்களிலேயே நாம் எல்லோரும் விரதம் அனுஷ்டித்து பிரார்த்தனை செய்கின்றோம்.



கன்னி ராசிக்கு அதிபதியானவன் புதன். வித்யா காரகன் எனப்படுபவன். கல்வி, புத்தி, தொழில் ஸ்தானம் சரியாக அமைய புதனின் பார்வை முக்கியமானது என்பார். இந்தக் காலத்தில் நவராத்திரி கொண்டாடுவது சாலச்சிறந்தது என்று கருதி எம் முன்னோர் இவ் விரதத்தை அனுஷ்டித்து வந்துள்ளனர்.

பொதுவாக எல்லாப் பூஜைகளும் பகல் நேரத்தில் மேற்கொள்வது வழக்கம். ஆனால் சிவராத்திரி, நவராத்திரி நாட்களில் மட்டுமே மாலையிலும், இரவிலும் பூஜைகள் செய்யப் பெறுகின்றன. நவராத்திரி என்றாலே சக்தியை வழிபடுவது என்பதுதான் அர்த்தம். உலகம் அனைத்தும் சக்தி மயம் என்பதை விளக்குவதே நவராத்திரியின் தத்துவம். பராசக்தியே சர்வ வல்லமை படைத்தவர் ஆவார். அந்த அம்பிகையின் மகிமைகளை ‘தேவி பாகவதம்‘ விரிவாகப் பேசுகிறது.

பிரபஞ்ச உற்பத்திக்கு காரணமான இறைவன் அனேக மூர்த்தங்களின் உருவமாகவும், அருவமாகவும், அருவுருவமாகவும் விளங்கிய போதிலும் அவையனைத்தையும் ஒன்றாக்கித் தாயான ஸ்வரூபத்தில் வழிபடுதல்தான் பெரும் பயனைத் தருமென “பிரபஞ்சவுற்பத்தி” எனும் நூல் கூறுகின்றது.

ஒரு மனிதனின் வளர்ச்சிக்கு உடல் வலிமையும், வாழ்க்கைக்குத் தேவையான செல்வமும் அறிவு வளமும் மிகவும் அவசியம். அதனை வெளிப்படுத்த உடல் வலிமையின் சக்தியாக ஸ்ரீதுர்க்கா தேவியையும், வாழ்க்கைக்குத் தேவையான செல்வத்தை நல்க வல்ல சக்தியாக ஸ்ரீமஹா லக்ஷ்மியையும் அறிவையும் ஆற்றலையும் தரவல்ல கல்வியின் தேவதையாக ஸ்ரீசரஸ்வதி தேவியையும் நாம் வழிபட்டு அந்த தேவியரின் அருள் பெற்று வலிமை, செல்வம், கல்வி ஆகிய மூன்றினையும் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட பண்டிகையே நவராத்திரி எனப்படும்.

இந்த அற்புத விரதம் தேவி விரதங்களுட் சிறந்த ஒன்றாகும். ஸ்கந்தபுராணத்தில் இம்மகிமை பேசப்படுகிறது. அமாவாசைத் திதி தொடர்பின்றி அதிகாலையில் பிரதமை

திதி வியாபித்திருக்கும் நாளே நவராத்திரி ஆரம்பதினமாகும். மறுநாட்காலை பிரதமை அற்றுப் போய் விடுமாயின் முதல் நாளில் விரதம் கொள்ளல் வேண்டும்.

பிரதமை தினத்தன்று தான் கும்பம் வைத்து பூஜை ஆரம்பிக்க வேண்டும். நவராத்திரி வழி பாடு சக்தி மகிமையை விளக்கும் மனிதனின் முக்கிய தேவைகளான கல்வி, செல்வம், வீரம் (தைரியம்) இம்மூன்றையும் வேண்டி அவற்றுக்கு அதிபதிகளான சரஸ்வதி, லஷ்மி, துர்கை என்று மூன்று சக்தி அம்சங்களையும் வழிபடுதலே இவ்விரத்தின் நோக்மாகும்.

சக்தி வடிவங்களை மூன்றாகப் பிரித்து இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி என முப்பெரும் தேவியராக வழி படுவது நம் வழக்கம். மலை மகள், அலை மகள், கலை மகள் என்று துர்கா, லட்சுமி, சரஸ்வதி ஆகியோரை வணங்குகின்றனர்.

இதில் துர்க்கை வீரத்தை (தைரியத்தை) அளிப்பவளாகவும், திருமகள் செல்வத்தை அருள்பவளாகவும், சரஸ்வதி (அறிவு) கல்வியை அருள்பவளாகவும் விளங்குகின்றனர். தேவியை வணங்க நவராத்திரியே ஏற்ற காலமாகக் கருதப்படுகிறது.

துர்க்கை:

இவள் நெருப்பின் அழகு. ஆவேசப் பார்வை. வீரத்தின் தெய்வம். சிவபிரியை. இச்சா சக்தி. “கொற்றவை”, “காளி” என்றும் குறிப்பிடுவர். வீரர்களின் தொடக்கத்திலும், முடிவிலும் வழிப்படும் தெய்வம். துர்க்கை, மகிஷாசுரன் என்ற அசுரனுடன் ஒன்பது இரவுகள் போராடி ஒன்பதாவது இரவு அவனைச் துவசம் செய்தாள்.

இவையே “நவராத்திரி” எனப்படும்.

அவனை வதைத்த வெற்றிகொண்ட பத்தாம் நாள் “விஜய தசமி” [விஜயம் மேலான வெற்றி] மகிஷாசுரமர்த்தினியின் திருக்கோலம் ஒரு சில திருக்கோவில்களில் மட்டுமே உள்ளன. மாமல்லபுரத்தில் சிற்ப வடிவில் மிக நேர்த்தியாக உள்ளது. வட இந்தியாவில் துர்க்கா பூஜை என்ற பெயரோடு கொண்டாடுகிறார்கள். நவதுர்க்கை: வன துர்க்கை, சூலினி துர்க்கை, ஜாதவே தோ துர்க்கை, ஜ்வாலா துர்க்கை, சாந்தி துர்க்கை, சபரி துர்க்கை, தீப் துர்க்கை, சூரி துர்க்கை, லவண துர்க்கை இவர் கள் துர்க்கையின் அம்சங்கள்.







ஆன்மாவை இறைவன்பால் வழிப்படுத்த திருவருள்தான் துணை நிற்கின்றது. இந்தத் திருவருட் சக்திதான் சித் சக்தி, பராசக்தி, ஆதிபராசக்தி எனப்படுகின்றது. இதில் ஆதிபராசக்தி தான் துர்க்கையாகும்.

நவராத்திரியில் முதல் மூன்று நாளும் இச்சா சக்தியின் தோற்றமான துர்க்கையின் ஆட்சிக் காலம். இதில் இறைவன் உலகத்தை வாழ்விக்க விரும்புகின்றான். அதனால், மகேஸ்வரி, கௌமாரீ, வராஹி என துர்கா தேவியாகவும்;

அடுத்த மூன்று நாட்களும் கிரியா சக்தியின் தோற்றமான இலக்குமியின் ஆட்சிக்காலம். இதில் இறைவன் ஆன்மாக்களுக்கு தனு, கரண, புவன போகங்களைக் கொடுக்கும் முறையை அறிகின்றான். அதனால், மஹாலட்சுமி, வைஷ்ணவி, இந்திராணி என லட்சுமி தேவியாகவும்;

இறுதி மூன்று நாட்களும் ஞானசக்தியின் தோற்றமான சரஸ்வதியின் ஆட்சிக்காலம். இந்த மூன்று தினங்களிலும் சரஸ்வதி, நரசிம்மீ, சாமுண்டி என சரஸ்வதி தேவியாகவும் சித்தரித்து வணங்குகிறோம்.

இந்த நாட்களில் நோன்பிருந்து, நைவேத்யங் களைப் படைத்து கலைக்கு ஆதாரமாகத் திகழும் கலைமகளை பாடி, ஆடி பரவசமுடன் வணங்குவோருக்கு கேட்டவரத்தை சக்தியானவள் கைமேல் நல்குவாள் என்பது ஐதீகம்.

தேவியானவள் அனைத்து உருவத்திலும் எல்லா இடங்களிலும் வியாபித்திருக்கிறாள் என்பதைக் குறிக்கும் விதமாகவே அனைத்து உருவ பொம்மைகளையும் கொலுவாக வைத்து வணங்கும் கலாச்சாரம் காணப்படுகிறது

நவராத்திரிப் பெருவிழாவின் ஒன்பதாம் நாள் மகாநவமி என்று தொழில்களையும், கல்வியையும், கலைகளையும் போற்றும் விதமாகவும், அதற்கடுத்த நாள் விஜயதசமி என்று வெற்றித் திருநாளாகவும் உலகெங்கும் உள்ள இந்துக்கள் மிகத் தொன்மைக் காலம் தொட்டுக் கொண்டாடி வருகின்றார்கள்.

இத் திருநாளில் (வித்தியாரம்பம் செய்தல்) ஏடு தொடக்குதல், புதிய வியாபார நிலையம் ஆரம்பித்தல், புதிய தொழில் ஸ்தபனங்கள் ஆரம்பித்தல் போன்றன ஆரபிப்பதால் வெற்றியும் புகழும் கிடைக்கும் என்பது ஐதீகம்.

மகிஷாசுரன், சண்ட முண்டர்கள், சும்ப நிசும்பர்கள் ஆகிய கொடிய அரக்கர்களை அன்னை பராசக்தி அழித்து வெற்றி கொண்ட திருநாள். தீமையின் உருவான ராவணனை ஸ்ரீராமன் போரில் வென்ற திருநாள். பாண்டவர்கள் தர்மத்தின் வெற்றிக்காக தங்கள் ஆயுதங்களையும், அன்னை துர்க்கையும் வழிபட்ட நன்னாள்.

விஜயதசமி என்பதற்கு மற்றொரு பொருளும் உண்டு. நவராத்திரியின் ஒன்பது நாளும் விரதமிருந்து தூய்மையான உள்ளத்துடனும், பக்தியுடனும் வழிபட்டவர்கள் இல்லம் தேடி, பத்தாம் நாளான தசமி அன்று ஸ்ரீ அன்னை விஜயம் செய்யும் நாளே ‘விஜயதசமி’ என்றும் கூறப்படுகிறது. அன்று ஸ்ரீ அன்னையே நம் இல்லம் தேடி வருகிறாள் என்பதே இந்நாளின் மிகப் பெரிய சிறப்பு.

நவராத்திரி நாளான ஒன்பது இரவுகள் தனி சக்தியாக விளங்கும் ஜகன்மாதா, பத்தாம் நாளன்று ஈசுவரனை வணங்கி “சிவசக்தியாக” ஐக்கிய ரூபிணியாக அர்த்தநாரீசுவரராக மாறு கிறாள் என்பதே இந்த பண்டிகையின் புராண வரலாறு. இந்த 9 நாட்களிலும் துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி தேவியரை ஒன்பது அவதாரங்களாக அலங்கரித்து, போற்றி பூஜித்து வழிபடுதல் வேண்டும்.

மகா சங்கார (பேரழிவுக்) காலத்தின் முடிவில் இறைவன் உலகத்தைச் உண்டாக்க விரும்புகின்றான் அப்போது இச்சை என்ற சக்தி தோன்றுகின்றது. பின் அதை எவ்வாறு என்று அறிகின்றான். அப்போது ஞானசக்தி தோன்றுகின்றது. பின் கிரியா சக்தியினால் உலகைப் படைக்கின்றான். இக்கருத்தே நவராத்திரி விழாவால் விளக்கப்படுகின்றது. (இச்சை = விருப்பம், ஞானம் =அறிவு, கிரியா = செய்தல், ஆக்கல்)

நவராத்திரியில் கொலு வைப்பது வழக்கம். அமாவாசை அன்றே படிக்கட்டுகள் வைத்து பொம்மை களை வைக்க வேண்டும் என்பதும், விஜய தசமியன்று ஒன்றிரண்டு பொம்மைகளைப் படுக்க வைத்துவிட்டுப் பின்னர் கலைக்க வேண்டும் என்பதும் சாஸ்திரம். தேவியரை வணங்குவதால் எதையும் பெறலாம். ராமர் கூட ராவணன் மீது போர் தொடுக்கும் முன் நவராத் திரி விரதமிருந்து சக்தியிடம் ஆசி பெற்றதாகக் கூறுவதுண்டு.

விளம்பரங்கள் வரவேற்கப்படுகிறது

உலகின் முதல் மெயில் புத்தகமாக வெளிவரும் நமது மாதமிருமுறை இதழுக்கு விளம்பரங்கள் வரவேற்கப்படுகிறது

முழு பக்க விளம்பரம் ரூ.5,000
அரைப்பக்க விளம்பரம் ரூ.2,500
விளம்பர ஏஜெண்ட்களுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்

மேலும் விபரங்களுக்கு
8939499598 9677159070 7299992699

நிர்வாக அலுவலகம் aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024

தவறாமல் படியுங்கள்
www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com





# இல்லற வாழ்வில் ஈடுபடுபவர்கள் அவசியம் கடைபிடிக்க வேண்டிய யாகங்கள்

சித்தர்களும், யோகிகளும் பல்வேறு யாகங்கள் செய்து தவ வலிமைகள் பெற்றனர். முற்கால அரசர்களோ பல யாகங்கள் செய்து தங்கள் இராஜ்ஜியங்களையும், படை வலிமைகளையும் பெறுக்கிக் கொண்டனர். யாகங்களால் இவை மட்டுமல்ல, பெறுதற்கரிய பிறவிப் பேறும் பெற முடியும். வாழ்க்கையில் யோகிகள் மட்டுமல்ல, இல்லறத்தாரும் கடைப்பிடிக்க வேண்டிய சில யாகங்கள் உண்டு.

இல்லறத்தில் வாழும் ஒவ்வொரு வரும் தினமும் செய்யவேண்டிய 5 வித யாகங்களை கீழ்க் கண்டவாறு பெரியோர்கள் வகுத்துள்ளனர்.

1.தேவயாகம், 2.பூத யாகம், 3.மனித யாகம், 4.பிரம்ம யாகம், 5.பிதுர் யாகம்.

**தேவ யாகம்:** ஒவ்வொருவரும் தினம் ஏதாவது ஒரு தெய்வத் திருமேனியைத் தரிசித்து வணங்க வேண்டும்.

**பூத யாகம்:** ஒவ்வொருவரும் தினமும் ஒரு பிராணிக்கு (பசு, பூனை, காகம், நாய், எறும்பு, குருவி, குரங்கு, பட்சி ஆகிய ஏதாவது ஓர் உயிரினத்துக்கு) ஒருபிடி உணவு அளிக்க வேண்டும்.

**மனித யாகம்:** தினமும் ஒரு ஏழை மனிதனுக்கு உணவளித்து வாழ்தல் மனித யாகம்.

**பிரம்ம யாகம்:** அறிவை கொடுத்த ஆசானை யும் ஞானம் கொடுத்த ரிஷியையும், தெளிவை கொடுத்த பெரியவர்களையும் மதித்து நடப்பது பிரம்ம யெக்கியமாகும்.

**பிதுர் யாகம்:** நம்முடைய காலஞ்சென்ற மூதா தையர்களுக்கு அர்ப்பணம் செய்தல், தீபம் ஏற்றல் முதலிய வற்றைத் தவறாமல் செய்வது பிதுர்யாகம்.

யாகம் செய்வதனால் பயன் உண்டா? என்றும் பஞ்சயெக்கியம் என்பது என்ன? என்றும் பலருக்கு தெரியாது.

யாகம் என்ற வார்த்தையின் பொருள் அர்ப்பணித்தல் ஆகும். நம்மிடம் உள்ளபொருட்களில் புனிதமானவைகள் என கருத கூடியதை இறைவனுக்கு அர்ப்பணம் செய்வதே யாகம் ஆகும். அம்மா சமைத்த உணவை எடுத்து அம்மாவுக்கே குழந்தை ஊட்டினால் தாய் சந்தோஷப்பட மாட்டாளா? அதே போல் இறைவன் படைத்ததை இறைவனுக்கே கொடுக்கிறோம். அம்மா கட்டி பிடித்து முத்தம் தருவது போல் கடவுளும் நமது பிராத்தனைக்கு எதாவது தருவார். அதனால் தான் வேதங்கள் யாகம் செய்வதை தர்மகாண்டத்தில் பேசுகிறது. பலன் நோக்கும் யாகமாக இருந்தாலும் பலன் நோக்கா யாகமாக இருந்தாலும் யாகத்தை செய்பவன் நிச்சயம் சிறப்பு அடைகிறான்.



www.aanmeegamalar.com



# வேப்பமரத்திற்கு

## கசப்புத் தன்மை வந்த வரலாறு

வேப்ப மரம் என்பது இறைவனால் பூமிக்கு கொடுக்கப்பட்ட மிகப்பெரிய அருமருந்து என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் அந்த வேப்ப மரம் எவ்வாறு கசப்புத் தன்மையை மருந்தாக தன்னுள் கொண்டுள்ளது என்பது பலருக்கும தெரியாது.

வேம்பைப் பற்றி அகத்தியர் இயற்றிய நூல்களில் தத்துவம் முன்னூறு என்ற நூலில் மூன்றாவது ஞானகாண்டத்தில் வேப்பமரத்தின் பெருமையை மிக அழகாகக் கூறுகிறார்.

பாரப்பா வேம்பினூட பிறப்பைக் கேளு

பணியனையன் பாலாழி யமுர்தம் தனை

நேரப்பா பெண்ணுருவாய் தேவர்க்குப் படைத்தார்.....

என்று துவங்கும் இந்தப் பாடலின் வாயிலாக மிக அழகாக வேம்பின் பெருமையை கூறியிருக்கிறார்.

அவர் கூறுவது....

வேம்பின் பிறப்பைப் பற்றிக் கூறுகிறேன் கேளு, திருமால் பெண்ணுருவம் கொண்டு அமிர்தத்தை தேவர்களுக்கு அகப்பையினால் பங்கிடும் போது, அசுரர்கள் அந்தப் பெண்ணின் அழகைக் கண்டு மயங்கி இருக்கையில், அசுரர்களில் ஒருவன் யாருக்கும் தெரியாமல் தேவர்கள் அமர்ந்திருந்த இடத்திற்கு வந்து அமர்ந்துவிட, திருமாலும் தேவர்களின் வரிசையில் தேவர்களைப் போல இருந்த அசுரனுக்கும் மூன்றகப்பை அமிர்தத்தைக் கொடுத்து விடுகிறார்.



அமிர்தத்தை கொடுத்த திருமாலுக்கு அருகிலிருந்த சூரியனும், சந்திரனும், அவன் அசுரன் என்று ஜாடை காட்டிச் சொல்ல, அமிர்தத்தை சாப்பிட்டுக் கொண்டு இருந்த அசுரனை நோக்கித் திருமால் அகப்பையால் வெட்டி விட, அசுரன் தலை வேறு உடல் வேறாக வெட்டப்பட்டுவிடுகிறான், தன்னை அடையாளம் காட்டிக் கொடுத்த சூரிய சந்திரர்களுக்கு பகைக் கிரகமான ராகு, கேது என மாறினார்கள்.

அகப்பையினால் வெட்டுப்படும் போது அசுரன் தனது வாயில் மீதமாக இருந்த அமிர்தத்தைக் கக்கினான்.

கக்கும்போது அசுரனின் வாயிலிருந்து பூமியில் விழுந்த அமிர்தமானது வேப்பமரமானது. வேம்புக்கு கசப்புச்சுவை வந்த காரணம் என்ன வென்றால், அசுரனின் (பாம்பின்) நச்சு வாயிலிருந்து வெளிப்பட்டதால் தான். அப்படிப் பட்ட வேம்பை உண்டு வந்தால் மனிதனுக்கு சாவு என்பதே கிடையாது. இப்படிதான் சனகாதி நால்வருடன் ( என் குருமார்கள் நால்வருடன்) சேர்ந்து நானும் சாப்பிட்டு காயசித்தி பெற்றேன்.

இவ்வாறு வேம்பின் பெருமையை அகத்தியர் கூறியுள்ளார். மேலும் வேம்பை காயசித்தி என்று அழைக்கிறார். காயம் என்றால் உடம்பு சித்தி என்றால் சித்திக்கும், ஆகவே, அழிவில்லா உடல் சித்திக்கும் என்று அகத்தியர் கூறியுள்ளார்.

இவ்வளவு பெருமையும் அமிர்தத்திற்கு நிகரான வேம்பை பல்வேறு காரணங்களால் நாம் புறக்கணித்து வருவது, அமிர்தத்தை வேண்டாம் என்பதற்கு சமமானதாகும். இனியாவது வேம்பை நமது நண்பனாக்கிக் கொண்டு நமது சந்ததிக்கும் நமது நண்பனை பழக்கிவிடுவோம்...



## மரத்தின் அடியில் தெய்வங்களை வைத்ததன் ரகசியம்

அரசமரம், வேப்பமரம் இரண்டுக்கும் கீழே விநாயகர் மற்றும் நாகர் சிலைகளைப் பிரதிஷ்டை செய்வது வழக்கமாக இருக்கிறது. இதன் ரகசியம் என்ன தெரியுமா? மழை பெய்தாலோ, நல்ல வெயில் அடித்தாலோ குடை வேண்டும். அரசமரத்திலும், வேப்பமரத்திலும் மழை மற்றும் கோடை காலத்தில் இலைகள் நெருக்கமாக இருக்கும். தன் கீழே பிரதிஷ்டை செய்யப்படும் பிள்ளையாரையும், நாகராஜாவை யும் அவை குடைபிடித்து பாதுகாப்பதாக ஐதீகம். இயற்கையும் இறைவனை வணங்குகிறது என்பது ஒரு ரகசியம். பனிக்காலம் இலையுதிர் காலம். அப்போது, இந்த மரங்கள் இலையை உதிர்த்து விட்டு கட்டைகளுடன் நிற்கும். அதாவது, குடையை மடக்கி விடும் எனலாம். அப்போது, சூரியன் தன் கதிர்களை இந்த இடைவெளி வழியே பாய்ச்சி, விநாயகரையும், நாகரையும் வழிபடுவான். அதுமட்டுமல்ல, வெயில், மழை காலத்தில் மரத்துக்கு கீழே மனிதர்கள் ஒதுங்குவார்கள். மரத்தடியில் ஒதுங்கும் சாக்கிலாவது, அங்கிருக்கும் இறைவனை ஒருதடவையாவது மனிதன் வணங்கிவிட மாட்டானா என்ற ஆதங்கம், மரத்தடி தெய்வ பிரதிஷ்டையின் மற்றொரு ரகசியம்.

# கலியுகத்தில் சிறந்தது சுமங்கலி பூஜை

## பெரியவா வாக்கு



கலியுகத்திற்கு உகந்த பூஜை சுமங்கலி பூஜை. இப்பூஜையினால் கொடிய பாவங்களும் தோஷங்களும் விலகும். இப்பூஜையை பலரும் கூடி செய்ய முடியாவிட்டாலும், குறைந்தபட்சம் ஒவ்வொரு குடும்பத்திலும் சிறிய அளவிலாவது செய்ய வேண்டும் என்பது காஞ்சிப்பெரியவரின் விருப்பம்.

ஒரு சந்தர்ப்பத்தில் வயதான தம்பதியர், தட்டில் பழம், பூ, அம்பாளுக்கு பட்டுப் புடவை, ரவிக்கையோடு பெரியவரைக் காண காஞ் சிபுரம் வந்திருந்தார்கள். மாயவரத்தில் இருந்து வந்த அவர்களிடம், “காவிரிக்கரையில் இருந்து வரும் நீங்கள் துலா ஸ்நானம் (ஐப்பசி மாதம் காவிரியில் நடக்கும் தீர்த்த நீராடல்)செய்து விட்டீர்களா?” என்று கேட்டார்.

தம்பதிகள் இருவரும், “ஆமாம்! சுவாமி! துலாஸ்நானம் ஆயிடுச்சு!” என்றனர்.

பெரியவர் அடுத்த கேள்வியாக, “மாயவரம் ஆற்றங்கரைக்கு துலாஸ் நானம் செய்ய ஏகபட்ட சுமங்கலிகள் வருவாளே!” என்றார்.

“வருவா” என்றனர் அவர்கள்.

“அது சரி! உங்க அகத்திலே சுமங்கலிப் பிரார்த்தனைஎல்லாம் ஒழுங்கா நடக்கிறதா?” என்று பெரியவர் கேட்டார். இந்தக் கேள்வியைக் கேட்டதும் தம்பதியர் முகம் வாடினர்.

“முன்பெல்லாம் ஒழுங்காக நடந்தது. இப்போ சுமங்கலி பிரார்த்தனை நடந்து பல வருஷமாச்சு!” என்று சொல்லி அந்த அம்மையார் கண்ணீர் விட்டு அழுதார். அந்த அம்மாளின் கணவர் மனைவியை சமாதானப்படுத்தி அழுகையை நிறுத்தினார்.

பெரியவரிடம், “சுவாமி! என்னோட கூடப் பிறந்தவர்கள் இரண்டு ஆண். ஒரே ஒரு பெண். அவளும் மூன்று வருஷத்திற்கு முன் இறந்துவிட்டாள். அதற்கு முன்பே சுமங்கலி பிரார்த்தனையை நடத்தாமல் விட்டுவிட்டோம். இப்போ எங்கள் குடும்பத்தில் வசதிக்கு எந்தக் குறைச்சலும் இல்லை. ஆனா, குடும்பத்தில் யாருக்கும் சுகமோ, மனநிம்மதியோ இல்லை. என் ஐந்து வயது பேரனுக்கு பேச்சு வரவில்லை. என் மூத்த நாட்டுப்பொண்ணுக்கோ (மருமகள்) ரத்தப் புற்றுநோய். மனநிம்மதி வேண்டியே உங்களைத் தரிசிக்க வந்தோம்,” என்று சொல்லி முடித்தார்.

சற்றுநேரம் மவுனம் காத்த பெரியவர், “இப்போ என் முன் வைத்திருக்கும் பழம், பூ தான் உங்களுக்கு கொடுக்கும் பிரசாதம். கொண்டு வந்த பட்டுப்புடவையை மூத்த நாட்டுப் பொண்ணுக்கு கொடுத்து கட்டிக்கச் சொல்லுங்க! இனிமேல் பட்டுப்புடவையே வேண்டாம். அது நல்லதல்ல. அது ஒண்ணும் உசத்தியானது கிடையாது. ஆடம்பரம் நமக்கு எதுக்கு? குலதெய்வத்திற்கு கொண்டு வந்த பூவைப் போடுங்கோ. அதோடு முக்கியமான ஒரு காரியமும் செய்ய வேணும்,” என்று சொல்லி பெரியவர் பேச்சை நிறுத்தினார்.

கேட்டுக் கொண்டிருந்த தம்பதியர் வணங்கி, “பெரியவா என்ன உத்தரவு போட்டாலும் அதை அப்படியே செய்றோம்” என்று கண் கலங்கினர்.

“உன் சகோதரியின் நினைவுநாளில் 108 சுமங்கலிகளுக்கு சாதாரண நூல் புடவை, ரவிக்கை, மங்கல திரவியங்கள் கொடுப்பதோடு, முடிஞ்சா அன்னதானமும் செய்யவேண்டும். அதன்பிறகு எல்லாம் நன்மையாகவே முடியும்!” என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

தம்பதிகள் பெரியவரின் உத்தரவுபடியே சுமங்கலி பூஜையைச் செய்தனர். மூன்று ஆண்டு களில் பேரனும் பேசத்தொடங்கி விட்டான். மூத்த மருமகளும் புற்றுநோயிலிருந்து முழுமையாக குணம் பெற்றார். பெரியவரின் வழிகாட்டுதலால் அக்குடும்பத்தில் மகிழ்ச்சி மலர்ந்தது.





## கோயில் வாயிற் படியை தொட்டு வணங்குவது ஏன்?

கோயிலில் வாயில் படியை பெரும் பாலான பக்தர்கள் தொட்டு கும்பிடுவதைப் பார்த்து இருப்பீர்கள். வாயில் படியை ஏன் தொட்டுக் கும்பிட வேண்டும். இதில் அறிவியல் பூர்வமான ஒரு செயலை நம் முன்னோர்கள் வைத்து இருக்கிறார்கள்.

ஒரு பக்தன், கோவில் வாசல் படியை தொட குனியும் போது அது முதலில் அவனிடம் பணிவை ஏற்படுத்துகிறது. அடுத்து அது அவன் உடம்பில் உள்ள சூரிய நாடியை இயக்குகிறது. படிக்கட்டை தொட்ட பிறகு வலது கை விரல்களை நம் நெற்றியில் புருவ மத்தியில் உள்ள ஆக்ஞா சக்கரம் மீது வைத்து அழுத்த வேண்டும். இது நம்மிடம் உள்ள தீய சக்திகளை விரட்டும். அதோடு தெய்வ சன்னதிகளில் இருந்து வரும் அருள் அதிர்வலைகளை மிக எளிதாக நமக்குள் கிரஹிக்க செய்யும். எனவே அடுத்த தடவை கோவிலுக்கு செல்லும் போது படிகளை வலது கையால் தொட்டு, உங்கள் புருவ மத்தியில் சற்று அழுத்தம் கொடுத்துப் பாருங்கள். அது உங்களை புது மனிதனாக்கி, புத்துணர்ச்சியுடன் கோயிலுக்குள் செல்ல வைக்கும்.



# ஸ்ரீதேவியா? மூதேவியா?

## குளிக்கும்போது கவனிக்க வேண்டிய விஷயங்கள்

குளிக்கும் போது நாம் எதற்காக குளிக்கிறோம் என்று அவசியம் அறிந்து குளிக்க வேண்டும். உடலில் சேரும் அழுக்கை போக்குவதற்காக குளிக்கிறோம் என்பது ஒரு காரணமே தவிர, அதுவே குளியலின் நோக்கமல்ல.

இரவு தூங்கி எழும்போது நமது உடலில் வெப்பக் கழிவுகள் தேங்கியிருக்கும். காலை எழுந்ததும் இந்த வெப்பகழிவை உடலில் இருந்து நீக்குவதற்காக குளிந்தநீரில் குளிக்கிறோம்.

எண்ணெய் குளியலின் போது மட்டுமே மிதமான வெந்நீர் பயன்படுத்த வேண்டும். எண்ணையின் பிசு பிசுப்பு உடலில் இருந்து முழுவதுமாக நீக்கவே வெந்நீர் பயன்படுத்த வேண்டும், மற்ற சமயத்தில் வெந்நீர் பயன்படுத்தக் கூடாது.

குளிர்ந்த நீரை அப்படியே மொண்டு தலைக்கு ஊற்றிவிடக்கூடாது. இது முற்றிலும் தவறு. நீரை முதலில் காலில் ஊற்ற வேண்டும், பின், முழங்கால், இடுப்பு, நெஞ்சு பகுதி, இறுதியாக தலை. காலில் இருந்து ஊற்றினால் தான் வெப்பம் கீழிருந்து மேல் எழும்பி விழி மற்றும் காது வழியாக வெளியேறும்.

நேரடியாக தலைக்கு ஊற்றினால் வெப்பம் கீழ் நோக்கி சென்று வெளியில் போக முடியாமல் உள்ளேயே சுழன்று கொண்டிருக்கும்.

நமது முன்னோர் குளியல் முறை மிகவும் சுவாரஸ்யமானது. அக்காலத்தில் குளக்கரையில் குளிப்பவர்கள், குளத்தில் ஒவ்வொரு படியாக இறங்குவார்கள். காலில் இருந்து மேல் நோக்கி குளிரும். வெப்பம் கீழ் இருந்து மேல் எழும்பி இறுதியில் தலை முங்கும் போது கண், காது வழியே வெப்பக் கழிவு வெளியேறிவிடும்.

இறங்கும் முன் உச்சந்தலைக்கு சிறிது தண்ணீர் தீர்த்தம் போல் தெளித்துவிட்டு இறங்குவார்கள். உச்சந்தலைக்கு அதிக சூடு ஏறக்கூடாது. சிரசு எப்போதும் குளிர்ச்சியாக இருக்க வேண்டும். எனவே உச்சியில் சிறிது நனைத்து விட்டால் குளத்தில் இறங்கும் போது கீழ் இருந்து மோலாக எழும் வெப்பம் தலையை தாக்காமல் கண், காது வழியாக வெளியேறிவிடும். இந்த முறையை நமது முன்னோர் பயன்படுத்தினர்.

அதே போன்று குளித்து விட்டு உடனடி யாக உடம்பை துடைக்க மாட்டார்கள். சிறிது நேரம் ஈரத் துணியோடு இருப்பார்கள். இவ்வாறு செய்வது உடலில் உள்ள பித்தம் நீங்கி பிராணவாயு அதிகரிப்பதற்காக, பித்தம் நீங்கி பிராணவாயு அதிகரித்தால் உடலில் தோன்றும் பல்வேறு நோய்களும் ஓடிவிடும். புத்தி பேதலிப்பு கூட சரியாகும்.

இனியாவது நாம் குளிக்கும்போது காக்கா குளியல் குளிக்காமல் குளிக்கும் நோக்கத்தை அறிந்து குளிப்போம் நமது சந்ததிக்கும் முன்னோர் சொல்லிக் கொடுத்த குளியல் முறையை எடுத்துச் சொல்லி அவர்களுக்கு வழிகாட்டுவோம்.



குளிக்கும்போது வடக்கு அல்லது கிழக்கு திசை நோக்கி நின்று குளிக்க வேண்டும். இவை இரண்டும் உத்தம திசைகள். கெடு காரியங்களில் ஈடுபட்டு அதாவது மயானம் போன்றவற்றிற்கு சென்று வந்தால் மட்டும் தெற்கு நோக்கி நின்று குளிக்கலாம். மேற்கு திசை நோக்கி குளித்தால் உடல் வலி வந்து சேரும்.

அதே போல குளித்து முடித்து துடைத்துக்கொள்ளும்போது முதலில் தலையை துவட்டக்கூடாது. பின்பக்க முதுகைத்தான் துடைக்கவேண்டும். இரண்டாவதாக முகத்தை துடைத்துக் கொள்ளவேண்டும்.

நாம் தினமும் குளிக்கும்போது, மகாலக்ஷ்மியும் அவரது அக்கா மூதேவியும் (மூத்த தேவி), வாசலில் காத்துகொண்டு நிற்பார்கள். நாம் குளித்து முடித்தவுடன் நமது உடலில் யார் முதலில் வந்து அமர்வது என்று அவர்களுக்குள் ஒரு போட்டி நடைபெறும். அந்த போட்டிப்படி, அக்காதான் முதலில் சென்று உட்காரவேண்டும் என்கிறபடியால், நாம் குளித்து முடித்தவுடன், தலையை துவட்டிக்கொள்ளக்கூடாது.

அப்படி துடைத்தால், அங்கு மூதேவி வந்து அமர்வதாக கூறப் படுகிறது. அப்படி அவள் அமர்ந்தால் நம் புத்தி வேலை செய்யாது. ஆகவே, முதலில் முதுகை துடைக்கவேண்டும். அப்போது மூதேவி முதுகில் அமர்வாள். அடுத்து முகத்தை துடைத்துக் கொள்ள வேண்டும், முகத்தில் ஸ்ரீதேவி குடி கொள்வாள். நாம் சென்ற இடமெல்லாம் நமக்கு அதிக வரவேற்ப்பு கிடைக்கும்.

முதலில் முகத்தை துடைத்துகொண்டால் மூதேவி அமர்வாள். நம்மை பார்த்தாலே பலருக்கு பிடிக்காது. இதுவே காரணமாகும்.

அறிவியல் ரீதியாக பார்க்கும் போது, முதலில் முதுகை துடைக்க முன்னோர் சொன்ன காரணம் வியப்பாக இருக்கும். குளித்து முடித்தவுடன் முதுகை துடைக்க துணியால் முற்படும் போது, கை மற்றும் நெஞ்சுப்பகுதியில் இருக்கும் எலும்புகள் விரிவடைந்து ஒருவித உடற்பயிற்சி நிகழ்ச்சி ஏற்படும். குளித்ததும் உடலுக்கு புத்துணர்வு ஏற்படும் போது,, இந்த உடற்பயிற்சியால் எலும்புகளில் தேங்கியிருக்கும் சிறிய சோம்பலும் விரட்டியடிப்பதால், முழு உடலுக்கும் அபரிமிதமான புத்துணர்வு கிடைக்கும். இதனால் சுறுசுறுப்பு கிடைப்பதால் முன்னோர் ஸ்ரீதேவி, மூதேவி என்ற மூத்ததேவியை இணைத்து ஒரு வழக்கத்தை கூறியுள்ளது தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

# எந்த விதத்தில் முடியுமே அந்த வகையில் செய்யும் கைங்கர்யம் உயர்ந்தது

இதனாலெல்லாம் என்ன பெரிய ப்ரயோஜனம் வந்துவிடப் போகிறது என்று எந்த செயலையும் நினைக்கக் கூடாது. ராமாயண அணில் நமக் கெல்லாம் முன்னுதாரணம். அத்தனாம் பெரிய ஸேது பந்தத்தில், ‘நாம் அல்ப ஜந்து, என்ன பெரிய கைங்கர்யம் பண்ணமுடியும்?’ என்று அது நினைத்ததா? அது பண்ணின ஸேவை ராமருக்கு என்ன உபகாரம் பண்ணிற்றோ பண்ணவில்லையோ, அதற்கே பெரிய உபகாரம் பண்ணி விட்டது.

ஸ்ரீராமனின் கருணையை, கர ஸ்பரிசத்தை ஸம்பாதித்துத் தந்துவிட்டது. இப்படி ‘நாம் என்ன பண்ணி கிழிக்கப் போகிறோம்?’ என்று ஒதுங்கியில்லாமல், நம்மாலான தொண்டு செய்தால், மற்றவருக்கு நம்மால் நல்லது நடந்தாலும் நடக்காவிட்டாலும் நமக்கு ஈஸ்வரப் பிரஸாதம் கிடைத்து சித்த சுத்தி லபித்துவிடும்.

ராமாயண அணில் மாதிரி இரண்டு பேரை என் lifetimeல் நினைக்கிறேன். (1944 பிப்ரவரியில்) காஞ்சீபுரத்தில் காமாக்ஷிக்குப் பெரி சாகக் கும்பாபிஷேகம் பண்ணினபோது, திருநெல்வேலி யில் ஏதோ சின்ன கடை வைத்திருந்த ஒருவர், ‘என்னால் இதற்குமேல் பண்ணச் சக்தி இல்லையே!’ என்று மனஸார வருத்தப்பட்டு நீளமாக எனக்கு ஒரு கடிதாசு எழுதி, ஒரு ரூபாய் மணிஆர்டர் பண்ணியிருந்தார். இதேமாதிரி இளையாத்தங்குடியில் ரொம்பப் பெரிசா முதல் ஸதஸ் (1962 நடைபெற்ற ஆகமசில்பவ்யாஸ பாரத கிராம கலாவித்வத்ஸதஸ்) நடத்தினபோது சென்னையிலிருந்து ஒருத்தர் ஐந்து ரூபாய் அனுப்பி வைத்து, பெரிய டொனேஷன்களோடு கூட இந்த அல்பக் காணிக்கையையும் அங்கீகரிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். பெரிய டொனேஷனெல்லாம் மறந்து போனாலும், அந்த ஒரு ரூபாயும், இந்த அஞ்சு ரூபாயும் என் மனஸை விட்டுப் போகவில்லை.



முன்னேயே நான் திரும்பத் திரும்பச் சொன்ன மாதிரி நம்முடைய தானம், தொண்டு இவற்றால் மற்றவர்கள் லாபமடைந்தாலும், அடையாவிட்டாலும் நம்முடைய மனஸின் அஹங்காரம் நிச்சயமாகக் குறையும். ஸங்கமாக எல்லாரும் சேருவதால் சமூகத்தில் ஸௌஜன்யம் உண்டாகும்.

எல்லாரும் சேர்ந்து குளம் வெட்டினால், அப்போது கொஞ்சம் கொஞ்சம் நம் அஹம்பாவத் தையும் வெட்டி எடுக்கிறோம். குளத்தில் ஜலம் வருவதைவிட நம் நெஞ்சில் ஈரம் வருகிறதே, அது போதும்! இந்த ஈரம், அன்பு, அருள் பரமாத்ம ஸ்வரூபத்தை நாம் உணருவதற்குப் பிரயோஜனமாகும். ‘பகவானிடத்தில் பக்தி வரவேண்டும், அவனருள் கிடைக்க வேண்டும்’ என்றால் எப்படி வரும்? பரோபகாரம் பண்ணி மனஸ் பக்குவமானால்தான் நிஜ பக்தி வரும். ஈஸ்வரானுக்ரஹமும் வரும்.

எந்தெந்த விதத்தில் முடியுமோ அப்படி நம் அன்பை, வெறும் பேச்சாக இல்லாமல், கார்யத்தில் காட்டினால் பரமேஸ்வரனின் அன்பு நமக்கும் கிடைக்கும்.

– தெய்வத்தின் குரல்




வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில்
இந்து சமயக் கருத்துக்களையும்,
பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

ஆன்மிகமலர் டிரஸ்ட்

Tamilnadu Government Redg.304/2016

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
அழகிய வண்ணங்களுடன்,
கண்ணைக்கவரும் விதத்தில்
புத்தம் புதிய பொலிவுடன்,
அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும்
சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும்
தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.

எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம்
உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.

மேலும் தொடர்பு கொள்ளவும்

7299992699 / 8825844033

www.aanmeegamalar.com



# ஆரோக்கியம் தரும் அற்புதமான மருத்துவ குறிப்புகள்

1. மிளகுபொடி, சுக்குப்பொடி, தண்ணீர் போட்டு கஷாயமாக்கி பாலும், வெல்லமும் சேர்த்து பருகினால் உடம்பு வலி தீரும்.

2. சுத்தமான வெள்ளாட்டுப் பாலில் ஒரு கரண்டி இஞ்சிச் சாற்றை கலந்து கொடுத்தால் குழந்தைகளுக்கு சளித்தொல்லை இருக்காது.

3. முள்ளங்கிக் கிழங்கின் சாறோடு மருதாணி வேரை இடித்து சேகரித்த சாற்றையும் சேர்த்து துளிகளாக காதில் விட்டுவர, குணம் தெரியும்.

4. வாழை மரத்துக் கிழங்கை இடித்து எடுத்து சாற்றை சற்று சூடாக்கி துளிகளாக காதில் விட்டால் காது வலிக்கு நல்ல பலனைத் தரும்.

5. தும்பைப்பூ, சுக்கு, காயம் இவற்றை எடுத்து நைத்து கடுகு எண்ணெயில் போட்டு காய்ச்சி காதில் சில துளிகள் விட்டால் குணமாகும்.

6. மாதுளம் பழத்தின் ரசத்தை சூடாக்கி இளம் சூடாக இருக்கும்போது சில துளிகள் காதில்விட வலி குறையும்.

7. சுக்கு, மிளகு, திப்பிலி, லவங்கப்பட்டை, சத குப்பை, காயம், அதிவிடயம் ஆகிய சரக்குகளை சமஅளவு எடுத்து அரைத்து சிறிதளவு நல்லெண்ணெயையும் காடியையும் அதனுடன் சேர்த்து காய்ச்சி, அந்த எண்ணெயை காதில் சில துளிகள் விட்டு வந்தால் காது இரைச்சல் அகலும்.

8. தேவதாரு, கோஷ்டம், சிற்றாமல்லி, முன்னை, பேராமல்லி முதலியவற்றை தனித்தனி யாக இடித்து நல்லெண்ணெய் விட்டுக் காய்ச்சி, ஆறவைத்து ஒவ்வொரு தைலத்திலும் ஒவ்வொரு துளி கலந்து காதிலே விட்டு பஞ்சடைத்து வந்தால், காதில் ஏற்படும் வலியுடன் ஒழுக்கு இருந்தால் குணமாகும்.

7. ரோஜாமொக்கு, சுக்கு, ஏலக்காய், கொத்து மல்லி வகைக்கு 5 கிராம் எடுத்து இளவறுப்பாக வறுத்து அம்மியில் வைத்து பெரும் பருக்கையாக உடைத்து வைத்துக்கொண்டு காலை, மாலை சாப்பிட்டு வந்தால் தேக உஷ்ணம் சமப்படும்.

8. நிம்மதியான உறக்கத்தைப் பெற ஒரு தேக்கரண்டி கசகசாவை எடுத்து இரண்டு முந்திரி பருப்பு சேர்த்து அரைத்து பசும்பாலில் கலந்து காய்ச்சி சிறிது கற்கண்டும் சேர்த்து பருகினால் நிம்மதியான உறக்கத்தைப் பெறலாம்.

9. சூட்டினால் ஏற்படும் வலியாக இருந்தால் தொப்புளைச்சுற்றி ஒரு ஸ்பூன் விளக்கெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் தடவி தொப்புளுக்குள்ளும் விடலாம்.

10. வயிற்று எரிச்சல் சுக்குத்தூளை கரும்புச் சாற்றுடன் கலந்து சாப்பிட, வயிற்று எரிச்சல் தீரும்.





11. தொண்டைக்கட்டு ஜலதோஷத்தினால் தொண்டை கட்டிக் கொண்டால் மிளகைப் பொடி செய்து, ஒரு ஸ்பூன் நெய்யை சூடு செய்து அதில மிளகுப் பொடியை சேர்த்துக் குடித்தால் தொண்டைக் கட்டு விலகும்.

12. வெள்ளரிக்காய் விதையை அரைத்து அத்துடன் ஐந்து பங்கு நீர் சேர்த்து கரைத்து வடிகட்டி சர்க்கரை சேர்த்துக் கொடுக்க நீரடைப்பு, நீர் எரிச்சல் ஆகியவை போகும். பசி கொடுக்கும் ஆற்றலும் வெள்ளரிக் காய்க்கு உண்டு.

13. பெருங்காயத்தை நீரில் கரைத்து ஒரு சங்களவு எடுத்து சிறிது ஓமத்தையும் சேர்த்துக் கொடுக்க குழந்தைகளுக்கு உண்டாகும் மாந்தம், வயிற்றுப் பொருமல் போகும்.



14. மிளகையும் எருக்கம்பூவையும் சம எடை எடுத்து நன்றாக அரைத்து பனை வெல்லம் கூட்டி சிறு குளுகை செய்து சாப்பிட்டால் இழுப்பு நோய் குணமாகும்.

15. சீரகத்துடன் மிளகைச் சேர்த்துச் சாப்பிட அஜீரணம் போகும். சீரகத்தை அரைத்து எலுமிச்சை சாற்றுடன் கலந்துகொடுக்க கர்ப்பிணிகளின் வாந்தி நிற்கும். சுண்ணாம்பில் ஊற வைத்த, பொடித்த சீரகம், வயிற்று ஜீரண நீரைச் சீர்படுத்தி அல்சர் நோயைக் கட்டுப்படுத்தும்.

16. ஒரு தம்ளர் வெந்நீரில் ஒரு ஸ்பூன் சர்க்கரை, ஒரு ஸ்பூன் நெய் விட்டு கலக்கிக் குடித்தால் வயிற்று வலி மாயமாய் மறைந்துவிடும்.

17. உடல் பருமனைக் குறைக்க இரவு ஒரு ஸ்பூன் ஓமத்தைத் தண்ணீரில் போட்டு, காலையில் வடிகட்டி ஒரு ஸ்பூன் தேனுடன் கலந்து குடித்து வந்தால் போதும்.

18. அவரை இலையை அரைத்து தினமும் காலையில் முகத்தில் தடவி வந்தால், முகத்தில் இருக்கும் தழும்புகள், முகப்பருக்கள் நீங்கிவிடும்.

19. பால் கலக்காத தேநீரில் தேன் விட்டுக் குடித்தால் தொண்டைக்கட்டு சரியாகும்.

20. சுக்கைத் தூளாக்கி எலுமிச்சைச் சாறில் கலந்து தின்றால் பித்தம் குறையும்.

21. மூட்டு வலியா? தேங்காய் எண்ணெய் எலுமிச்சைச் சாறை கொதிக்கவிட்டு ஆறியபின் மூட்டுக்களில் தேய்த்தால் நிவாரணம் கிடைக்கும்.

22. துளசி இலை போட்ட நீரை தினசரி குடித்து வந்தால் ஞாபகமறதி நீங்கி மூளை பலம் பெறும்.

23. மிளகுத் தூளுடன் நெய், வெல்லம் கலந்து உருண்டையாக்கி சாப்பிட்டுவர தொண்டைப்புண் குண மாகும்.

24. வாயில் புண் இருந்தால் வயிற்றிலும் இருக் கலாம். தினமும் காலையிலும் மாலையிலும் தேங்காய் பாலில் தேனை விட்டுச் சாப்பிட்டால் புண் ஆறிவிடும்.

25. அஜீரணத்திற்கு இரண்டு ஸ்பூன் கருவேப்பிலைச்சாறை ஒரு டம்ளர் மோரில் கலந்து குடித்தால் அஜீரணம் நீங்கும்.

Bhaan raja graphics
Specialist in
Book, Wrapper, Layout, logo, magazine work
Tamil & English
Cell: 8939499598 E-mail: bhaanrajagraphics@gmail.com
Advt.




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
•••
இணை ஆசிரியர்
முருகன்
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
•••
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
•••
நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598

### ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070

# உலகம் முழுவதும் நமது சேவை தொடர உதவுங்கள்

ஆன்மீக கருத்துக்களை, தெரியாத செய்திகளை, எளிதான பரிகாரங்களை தெரியாத மக்களுக்கு தெரியப்படுத்துவதுதான் நமது நோக்கம். இந்த நோக்கம் உள்ள அன்பர்கள் யார் வேண்டுமானாலும் எங்களுடன் இணையலாம்.

நமது இந்த சேவையின் அடுத்த கட்ட வளர்ச்சியாக மக்களுக்கு அதிகம் பயன்படும், சிவபுராணம், கந்தசஷ்டி கவசம், மகான்களின் கருத்துகள், சஹஸ்ரநாமம்... போன்ற பல்வேறு பயனுள்ள மந்திரங்கள் போன்றவற்றை அழகிய வடிவமைப்பில், தற்போதைய காலகட்டத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப செல்போன், டேப், லேப்டாப், கணிப்பொறி போன்றவற்றில் படிக்கும் விதமாக இ–சேவை வடிவத்தில் தயாரிக்க தீர்மானித்துள்ளோம்.

இதற்கு பல்வேறு வகையில் பல தொழில் நுட்பங்களை பயன்படுத்த வேண்டியுள்ளது அதனால் இந்த சேவை துவங்க கால தாமதம் ஆகும். இருந்தாலும் வெற்றிகரமாக இந்த சேவையை செய்ய நாங்கள் முயற்சிக்கிறோம். வாசகர்களாகிய நீங்களும், எங்களுக்கு ஆதரவு தாருங்கள்.

மேலும் நமது இதழின் வளர்ச்சி தற்போது 6,000த்தை தாண்டியுள்ளது இச்சேவையை இன்னும் அதிகப்படுத்த முயற்சி செய்கிறோம். எனவே இந்த புத்தகத்தை பெறும் வாசகர்கள் ஒவ்வொருவரும், தங்களது உறவினர்களுக்கும் இந்த புத்தகத்தை அனுப்பி வைத்து அவர்களுக்கும் நமது சேவையை தெரியப்படுத்துங்கள்.

ஒவ்வொரு வாசகர்களும் குறைந்தது 4 நண்பர்களுக்காவது நமது மெயில் புத்தகத்தை அனுப்பிவைக்க வேண்டும் என்று அன்பு கட்டளையாக தங்களை கேட்டுக் கொள்கிறோம்.

ஆன்மிகத்தில் நாட்டமுள்ள அன்பர்கள் தாங்கள் செல்லும் கோயில், உங்களுக்கு தெரிந்த மகான்கள், அவர்களின் சொற்பொழிவுகள், சித்தர்கள், பெரியவர்களின் அறிவுரைகள் போன்றவற்றை மற்றவர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணினால், அவற்றை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

இந்து மதத்தில் உள்ள கருத்துக்களும், வழிமுறைகளும் பல்வேறு காரணத்தால் மறைக்கப்பட்டுவிட்டது. அதை தெரிந்த அன்பர்கள் தயவு செய்து தெரியாதவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். அதை எடுத்துச் சொல்ல நமது இதழை பயன்படுத்துங்கள்.

நமது இதழின் மூலம் பல ஆயிரம் வாசகர் படித்து பயன்பெறவும், மறையும் கருத்துக்கள் புதிதாக முளைத்து வளரவும் நீங்கள் ஒரு காரணமாக இருப்பீர்கள். பயன்படும் கருத்துக்களை, பயன்படாமலிருக்க நாம் காரணமாக இருந்தால் அதுவும் ஒரு வகையில் பாவச் செயல்தான்.

இந்து மதத்தில் இல்லாத கருத்துக்களே இல்லை... மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை தேவையான அனைத்து வழிமுறைகளும்.... நல்வாழ்விற்கு தேவையான அனைத்து நடைமுறைகளும்.... கால மாற்றத்திற்கேற்ப பயன்படும் பல்வேறு செயல்முறைகளும் தற்போது பல்வேறு காரணங்களால் மெல்ல மறைகிறது.

வேப்பமரக் குச்சியும், கரித்தூளும் பற்களுக்கு உறுதி, என்பதை அறிந்த நமது முன்னோர்கள் அவற்றை பயன்படுத்தும் விதத்தை மிக அழகாக எடுத்துச் சொல்லி




அதை மக்களும் பயன்படுத்தி வந்த சமயத்தில், பல்வேறு பற்பசைகள் அதை கேலியும் கிண்டலும் செய்து மக்களின் மனதில் தேவையற்ற மாற்றத்தை ஏற்படுத்தி, தற்போது அதே வேப்பங்குச்சியையும், கரித்தூளையும் தங்களது பற்பசையில் பயன்படுத்துவதாக விளம்பரம் செய்து கொண்டிருக்கின்றன.

இதைப் போன்றுதான் நமது நல்ல அரிய கருத்துக்கள் தற்போது தேவையற்ற பொய்யான சாயங்கள் பூசப்பட்டு மறைக்கப்படுகின்றன. அவை சிறிது காலம் கழித்து வெளிநாட்டுக்காரர்களால் புதுப்பிக்கப்பட்ட கருத்துக்களாக மாறி, மீண்டும் நமக்கே வந்து சேரும் அவல நிலையை முடிந்த அளவு நாம் தடுத்து நிறுத்த நல்ல கருத்துக்களை நமது சந்ததியினருக்கு எடுத்துச் சொல்லி, நமது இந்து மதத்தின் பெருமையை கட்டிக் காக்க நாம் முயற்சி செய்வோம், மற்றவருக்கு எடுத்துக் கூறி அவர்களுக்கு நல்ல வழிகாட்டியாக நாம் மாறுவோம் வாருங்கள்....

– ஆசிரியர்

# தொடர்ந்து வெளிவர உதவுங்கள்

நமது ஆன்மிகமலர் டிரஸ்ட்டின் மூலம் வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தினை பல்வேறு இணையதளங்களில் வெளியிட முடிவு செய்துள்ளோம். இதற்கு முந்தைய இதழ்களையும் வரப்போகின்ற மற்ற இதழ்களையும் தொடர்ந்து இணையதளத்தில் நிரந்தரமாகவும், இலவசமாகவும் ஆன்மிக அன்பர்கள் தொடர்ந்து பார்த்து, டவுன்லோடு செய்யும் வகையில் பணிகள் தொடர்கின்றன. எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம். நீங்கள் செய்யும் சிறு உதவி எங்களுக்கு பெரிய உதவியாக இருக்கும்.

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

மேலும் தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8825844033
aanmeegamalar@gmail.com



# சரியை, கிரியை, யோகம், ஞானம்

இறைவனை அடைய நம் முன்னோர்கள் பல்வேறு வழிகளை போதித்துள்ளனர். அதில் குறிப்பாக சரியை, கிரியை, யோகம், ஞானம் போன்றவற்றில் ஏதாவது ஒன்றியல் அந்த போதனைகள் அடங்கிவிடுகிறது. ஆயிரக் கணக்கான வழிமுறைகளும் மேற்கண்ட வழி முறைகள் நான்கிற்குள் அடங்கிவிடுவது ஆச்சரியமாக இருந்தாலும் அந்த நான்குவிதமான பக்தி மார்க்கத்தை விரிவாக பார்க்கலாம். தற்போது நாம் எந்த மார்க்கத்தில் இருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ள நமக்கு பயன்படும்.

**சரியை:** நமது இல்லத்தில் இறைவனை ஆத் மார்த்தமாய் வழிபடுவதுடன், கோவில்களுக்கு சென்று இறைவனைப் பணிந்து அங்கே மலர் கொய்து மாலை தொடுத்தல் போன்ற ஆலயத் தொண்டுகளை செய்வதன் மூலம் கிடைக்கப் பெறுவதாகும்.இதுவே சரியை வழி எனப்படுகிறது. இத்தகைய நெறி தவறாத வாழ்வின் மூலம் கிடைக்கப் பெறும் முக்தி நிலை சாலோக முக்தி எனப்படும்.

**கிரியை:** சிவச்சின்னங்களை அணிந்து சிவனடி யாராக இறைச் சேவை செய்வது ஒன்றையே வாழ்வின் நோக்கமாய் கொண்டு வாழ்வதே கிரியை வழியாகும். இந்த வகையில் கிடைக்கும் முக்தி நிலை சாமீப முக்தி எனப் படும்.

**யோகம்:** தகுதியான குருவை பணிந்து யோக முறைகளை கற்று, தொடர் பயிற்சியின் மூலம் உடல்,மனம் ஆகியவற்றை தூய்மையாக்கி இறைவனை வழிபாடு செய்து முக்தி பெறுவதே யோக வழியாகும். இத்தகைய முக்தி நிலை சாரூப முக்தி எனப் படும்.

**ஞானம்:** நான் என்கிற அகந்தையை அழித்து தானே பிரம்மமாய் உணர்வது ஞான வழியாகும். இந்த வகையில் பெறும் முக்தி நிலை சாயுச்ய முக்தி எனப்படும்.

Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 7299992699





# சகுனி வரலாறு



காந்தார நாட்டு மன்னன் சுபலன் இவரின் கடைசி மகன் சகுனி. துரியோதனனின் தாய் காந்தாரியின் தம்பி ஆவார் சகுனி..

காந்தாரியின் முதல் கணவருக்கு நீண்ட ஆயுள் இல்லை என்பதால் காந்தாரியை ஒரு ஆட் டுக்கடாவுக்கு மணம் செய்வித்தும், பிறகு அந்த ஆட்டை பலியிட்டதால், நுணுக்கமாய் அன்றைய சோதிடப்படி பார்த்தால் காந்தாரி ஒரு விதவை..

பீஷ்மரின் உத்தரவில் ஆட்டுக்கிடாய் விவா காரம் மறைக்கப்பட்டு திருதராஷ்டிரரை மணம் முடிக்கிறார் காந்தாரி. பிறகு விவரம் அறிந்த பிதாமகர் என்னை சுவலன் ஏமாற்றிவிட்டான், ஒரு விதவையையா? என் வீட்டுக்கு மருமகளாக கொண்டு வந்தேன். உலகுக்கு தெரிந்தால் நகைப்புக்கு இடமாகுமே, சுவலன் குடும்பத்தை அழித்து அந்த ரகசியத்தை வெளிவராமல் செய்துவிடுகிறேன்" என்று சுவலனையும அவன் மகன்களையும் பிடித்து சிறையில் அடைத்தார் பிதாமகர் பீஷ்மர்.

ஒரு குடும்பத்தையே கொள்வது அதர்மம் என்பதை அறிந்த பீஷ்மர் தினமும் ஒரு கைபிடி அரிசி மட்டும் உண்ணக் கொடுத்தார். நாட்கள் செல்லச் செல்ல, நிலை மை மோசமாகியது, சகோதரர்களுக்குள்உணவுக்காக சண்டை வந்தது, சுவலன் ஒரு யோசனை சொன் னான் "நம்மில் யாராவது புத்திசாலியானவன் ஒருவன் மட்டும் உணவை உண்டு பிழைத்து இந்த அநியாயத்தைச் செய்த பீஷ்மரை பழிவாங்கட்டும்" இந்த யோசனைக்கு அனைவரும் உடன்பட்டனர்.

வயதில் இளையவனான சகுனிதான் உணவை சாப்பிட தேர்ந்தெடுக்கப்பட்டான். குடும்பத்தில் சகுனியின் முன் பட்டினி கிடந்து ஒவ்வொருவராக மடிந்தனர். இறக்கும் முன் சுவலன் சகுனியின் கால்களில் ஒரு காலின் கணுக்காலை அடித்து உடைத்தான், "இனி நீ நடக்கும் போதெல்லாம் நொண்டுவாய், ஒவ்வோரு முறை நொண்டும் போதும் கௌரவர் செய்த அநீதியை நினைவில் கொள், அவர்களை மன்னிக்காதே" என்றார்.

சகுனிக்கு தாயத்தின் மீது ஒரு சபலம் உண்டு என்று சுவலனுக்கு தெரியும், சாகும் தறுவாயில் தன் மகனிடம் "நான் இறந்த பிறகு என் கை விரல் எலும்புகளை எடுத்து தாயக்கட்டையை உண்டாக்கு, அதில் என் ஆத்திரம் முழுவதும் நிறைந்து இருக்கும் நீ எப்படி தாயக்கட்டையை போட்டாலும் நீ விரும்பிய படியே எண்ணிக்கை விழும் நீயே எப்போதும் வெற்றி பெறுவாய்" என்றார்.

சிறிது காலத்தில் சுவலனும், அவனது பிள்ளைகளும் இறந்து போயினர். சகுனி மட்டும் தப்பிப் பிழைத்து கௌரவர்களுடன் பீஷ்மரின் கவனிப்பில், பாதுகாப்பில் வாழ்ந் தான். கௌரவர்களின் நண்பனாகக் காட்டிக் கொண்டான், ஆனால் பீஷ்மர் தன் குடும்பத்தை அழித்தது போல பீஷ்மரின் குடும்ப வீழ்ச்சிக்காக திட்டமிட்டு நிறைவேற்றினான்..

இறுதியில் சகாதேவனால் குருச்சேத்திரப் போரில் கொல்லப்பட்டார். சகுனியின் மகன் உல்லூகன் அபிமன்யுவால் கொல்லப்பட்டான்.

# உயர்ந்தவனாக சோதனைகளை கடந்தாக வேண்டும்



இளைஞர்களே! பெருஞ்செயல்களை செய்து முடிப்பதில் எப்போதும் முன்னேறிச் செல் லுங்கள். ஏழைகளிடமும், சமுதாயத்தில் ஒடுக்கப் பட்டவர்களிடமும் இரக்கம் காட்டுங்கள். நமக்கு மரணமே வாய்த்தாலும்கூட அவர்களுக்கு இரக்கம் காட்டுவது நமது லட்சியம் ஆகும்.

என்னுடைய லட்சியத்தை உண்மையில் சில சொற்களில் சொல்லி முடித்துவிடலாம். அதாவது, மக்களுக்கு அவர்களுடைய தெய்வீகத் தன்மையை எடுத்துச் சொல்வதும், வாழ்க்கையின் ஒவ்வொரு இயக்கத்திலும் அதை எப்படி வெளிப்படுத்திக் காட்டுவது என்பதை எடுத்துச் சொல்வதும்தான் அது.

எழுந்திருங்கள். விழித்திருங்கள். நீங்களும் விழித்திருங்கள், மற்றவர்களையும் விழிக்கச் செய்யுங்கள். உங்களுடைய இந்த உலக வாழ்க்கை முடிவடைவதற்கு முன் னால், மனிதப்பிறவியினால் பெறுவதற்கரிய பெரிய நன்மையை அடையுங்கள். லட்சியத்தை அடையும் வரையில் நில்லாமல் முன்னேறிச் செல்லுங்கள்.

உயர்ந்த லட்சியம் கொண்ட மனிதன் ஒருவன் ஆயிரம் தவறுகள் செய்தால், லட்சியம் ஒன்றுமில்லாமல் வாழ்பவன் ஐம்பதாயிரம் தவறுகள் செய்வான் என்று நான் உறுதியாக சொல்வேன்.

மக்கள் உன்னை புகழ்ந்தாலும் சரி, இகழ்ந் தாலும் சரி, கடவுள் உனக்கு அருள் புரியட்டும், அல்லது புரியாமல் போகட்டும். உன் உடல் இன்றைக்கே வீழ்ந்து போகட்டும். ஆனால் நீ, உண்மை என்னும் பாதையிலிருந்து மட்டும் அணுவளவேனும் பிறழ்ந்து செல்லாமல் இருப் பதில் கவனமாக இரு. மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்தவன் ஆகிறானோ, அந்த அளவுக்கு அவன் கடுமையான சோதனைகளை கடந்தாக வேண்டும்